பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 12 வியாழக்கிழமை (28-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:338

## தாயை வெட்டிக் கொலை செய்து குழிதோண்டிப் புதைத்தார் மகள்!

### ஆனைக்கோட்டையில் மனநோயாளி கொடூரம்!!

யாழ்ப்பாணம்,ஒக்.28

மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று கூறப்படும் பெண் ஒருவர் வீட்டில் எவரும் இல்லாத நேரம் பார்த்து தனது வயோதிபத் தாயாரைக் கத்தியால் வெட்டிக் கொலைசெய்துவிட்டு அவரது சடலத்தை வீட்டின் பின்புறமாகக் கிடங்கு வெட்டிப் புதைத்தார்.

ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பாவிலுப்பிள்ளை லோறன்சியா (வயது-79) என்பவரையே அவரது மனநிலை பாதிக்கப்பட்ட மகளான பத்திரிநாதன் கொலஸ்ரிக்கம்மா (வயது-45) என்பவர் வெட்டிக் கொலைசெய்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரும் அவரது இரு மகள்மாரின் குடும்பத்தினரும் குறிப்பிட்ட வீட்டில் வசித்து வந்தனர் என்றும் - நேற்றைய தினம் விட்டிலுள்ள ஏனையோர் வெளியில் சென்றிருந்த வேளை பிரஸ்தாப மனநோயாளி தனது வயோதிபத் தாயாரைக் கதிரையில் இருத்திவிட்டுக் கத்தி ஒன்றி

(16ஆம் பக்கம் பார்க்க)

### வீதியிலிருந்து விலகி வீட்டுக்குள் புகுந்தது மினிபஸ்

## மந்திகையில் நேற்றுக் கோரவிபத்து; தீவகக் கல்விப்பணிப்பாளர் மரணம்!

பருத்தித்துறை,ஒக்.28

வீதியால் வந்துகொண்டிருந்த மினிபஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக இருந்த வீட்டுக்குள் புகுந்ததால் அந்த வீட்டின் வாசலில் நின்று கதைத்துக்கொண்டிருந்த தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால வாணிதாசன் (வயது-53) மினிபஸ் சில்லுக்குள் அகப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர். பருத்தித்துறை, மந்திகை, மடத்தடியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றது.



பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இந்த மினிபஸ் மந்திகை, மடத்தடிப் பகுதியில் வேகக கட்டுப்பாட்டை இழந்து, வீதியோரமாக இருந்த மதிலையும் உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் புகுந்ததாகக் கூறப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சைத் தொடங்குவதற்கு

# துணிகர நகர்வுகளை உறுதியுடன் அரசு முன்னெடுக்க வேண்டும்!

## விடுதலைப் புலிகள் அழைப்பு

கிளிநொச்சி,ஒக்ரோபர்28

**இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கு துணிகரமான நகர்வுகளை உறுதியுடன் முன்னெடுக்கும்படி சந்திரிகா அரசுக்கு புலிகள் இயக்கம் அழைப்பு விடுத்திருக்கின்றது.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் மூலமே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று வெளியான அச்சஞ்சிகையில் புரட்டாதி - ஐப்பசி மாதத்துக்குரிய 119 ஆவது இதழின் முகப்புப் பக்கத் தலைப்புச் செய்தியில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைதான் அடிப்படையாக அமைய முடியும். இது புலிகள் இயக்கத்தின் உறுதியான நிலைப்பாடாகும்.

சமாதானப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாக அமையவேண்டும் என்று சிங்கள அரசு விரும்பினால் இந்த அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். இதை ஏற்க மறுப்பதென்பது

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று அகாஷியைச் சந்திக்கின்றனர்

கொழும்பு,ஒக்.28

நேற்று இலங்கை வந்து சேர்ந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இன்று தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் முடங்கிப்போயிருக்கும் இந்த நிலையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துமாறு அனைத்துத் தரப்புகளையும் ஜப்பானின் விசேட தூதுவர் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனது சந்திப்புகளின் ஆரம்பமாக இன்று காலை 10.30 மணிக்கு தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அவர் கலந்துரையாட இருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காமல் இலங்கை அரசு இழுத்தடித்துவரும் நிலையில எத்தகைய நிதியுதவிகளையும் ஜப்பான் இலங்கை அரசுக்கு வழங்கக்கூடாது எனத் தமிழ்க கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தச் சந்திப்பின் போது அகாஷியிடம் வலியுறுத்துவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இன்று பகல் 11.30 மணிக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## காதரை விடுவிக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு தந்தி அனுப்புங்கள்!

### பள்ளிவாசல்களுக்குக் கோரிக்கை

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆர்.எம்.காதரை நீதி, நியாயத்தின் பேரில் விடுவிக்கக்கோரி நாட்டில் உள்ள சகல பள்ளிவாசல்களும் ஜனாதிபதிகக்கு தந்திமூலம் வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

- இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் லீக கோரியிருக்கிறது.

இவ்விடயம் குறித்து லீக்கின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.எல்எம்.காஸிம் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

புனித ரமழான் மாதத்தில் காதர் எம்.பியின் தயாளமனப்பான்மையால் பல ஏழை முஸ்லிம் மக்கள் நோன்பு நோற்கவும் - திறக்கவும் - வழியேற்பட்டது. ஆனால், அவருக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியான நிலையால் இந்த ஏழை மக்களுக்கு இவ்வாய்ப்புக் கிடைக்காமல் போயுள்ளது.

எனவே, வெள்ளிக்கிழமை இரவுகளிலும், ஜும்ஆப் பிரசாரத்திலும் இந்தக் கொடை வள்ளலுக்காக வேண்டியும், அவருடைய விடுதலைக்காகவும் பிரார்த்திக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன். ஜும்ஆத் தினத்தில் இவருடைய விடுதலை குறித்து மக்களுக்கு எடுத்துக்கூறுமாறும் கேட்கிறேன். இவரின் விடுதலைக்காக அனைத்திலங்கைப் பள்ளிவாசல்களும் முன்வந்து ஜனாதிபதியை நிர்ப்பந்திக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## சுவிஸ் பிரஜையின் கொலையுடன் புலிகளுக்குத் தொடர்பு இல்லை!

### கண்காணிப்புக்குழு கருத்து

மட்டக்களப்பு, மாமாங்கத்தில் சுவிஸ் பிரஜையான ஹான்ஸ் வுல்ரிச் ஹேசோக் (வயது-62) கிரனேட்வீசிக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்புகள் இருப்பதாகத் தெரியவில்லை என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இக்கொலை தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறிய மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் சுசானா ரிங்கார்ட் பெட்ரசன், விடுதலைப் புலிகள் இச்சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்கள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இக்கொலை தொடர்பாக பலவேறு கோணங்களில் தாம் விசாரணைகளை மேற கொள்ளவேண்டியுள்ளனர் எனத் தெரிவித்த பொலீஸ் அதிகாரியொருவர், தேவைப்படும் பட்சத்தில் கொழும்பிலிருந்து விசேட குற்றப் புலனாய்வுத்துறையினர் வரவழைக்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைச்சம்பவம் குடும்பத்தகராறு காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என்றும் பொலீஸ் தரப்பில் தற்போது சந்தேகம் நிலவுகின்றது. மனைவியின் முதல்தார மகன் மூலம் ஏற்கனவே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலீஸில் சம்பந்தப்பட்ட நபரால்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - படையினர் கிழக்கில் சந்திப்பு

மட்டக்களப்பு,ஒக்.28

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காப் படை அதிகாரிகளுக்குமிடையிலான அடுத்த சந்திப்பு எதிர் வரும் சனிக்கிழமை வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நடைபெறவிருக்கின்றது.

இம் மாதம் 6ஆம் திகதி இரு தரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மாதமொருமுறை நடைபெறவிருக்கும் முதலாவது சந்திப்பு இதுவாகும். இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையிலும், படை அதிகாரிகள் 23-2ஆவது படைப் பிரிவு தலைமையகக் கட்டளை அதிகாரி கேணல் லக்ஸ்றீ அமரதுங்க தலைமையிலும் கலந்துகொள்வார்கள். குறிப்பாக நடைபெறவிருக்கும் இச்சந்திப்பில் அண்மைக் காலங்களில் மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்ற தமது ஆதரவாளர்கள் மற்றும் சுவிஸ் பிரஜை உட்பட 6 ஆள்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பு படைத் தரப்பின் கவனத்திற்கு சுட்டிக் காட்டுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பிட்ட சந்திப்பு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி நடைபெறும் என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவிக்கின்றது. (எ)

## பௌத்தத்துக்கு நன்மை இருந்தால் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவு

### ஹெல உறுமயவின் நிலைப்பாடு இது!

கொழும்பு,ஒக்.28

அடுத்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத்திட்டத்தில் பௌத்த சமயத்துக்கு நன்மை பயக்கக் கூடிய விடயங்கள் இருந்தால்தான் அதற்கு தமது கட்சி ஆதரவு வழங்கும் என்று ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

எனவே, வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக கப்பட்ட பின்னரே - அதனை ஆராய்ந்து பார்த்துவிட்டே அதற்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து தமது கட்சி முடிவு செய்யும் என்று அந்தக் கட்சியின் உபதலைவர் ஓமல்வே சோபிததேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கட்சி ஏற்கனவே கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசின் புதிய வரவு - செலவுத் திட்டம் அடுத்த மாதம் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தோட்டத்தொழிலாளரின் எதிர்காலத்தை சூனியமாக்கிவிட்டது இ.தொ.காங்கிரஸ்

## கடுப்புடன் பாய்கின்றது மலையக மக்கள் முன்னணி

கொழும்பு,ஒக்.28

வாழ்க்கைச் செலவுப்புள்ளி உயர்வுக்கு அமைய சம்பள உயர்வு கிடைப்பதைத் தடை செய்த இ.தொ.கா. இன்று தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலத்தையே சூனியமாக்கி விட்டது என மலையக மக்கள் முன்னணி குற்றஞ்சாட்டுகிறது.

வாழ்க்கைச் செலவுப்புள்ளி உயர்வுக்கு அமையச் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருந்தால எந்தவிதமான போராட்டங்களும் இன்றி தோட்டத்தொழிலாளர்கள் இன்று 350 ரூபாவை நாள் சம்பளமாகப் பெற்றிருக்க முடியும்.

ஆனால், கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் அதற்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டனர் இ.தொ.காவினர் என்று சாடுகின்றார் மலையக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலாளரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான எஸ். அருள்சாமி.

ஆரம்பகாலத்தில் சம்பள நிர்ணயசபையின் சிபார்சுகளின் படியும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வுக்கு அமையவும் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டன.

1992 ஆம் ஆண்டு தோட்ட முதலாளிமாரின் ஏஜெண்டாக மாறிய இ.தொ.கா. கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் அந்தப் பழைய முறைக்கு வேட்டு வைத்துவிட்டது.

மீண்டும் இம்முறை நடைமுறைப்படுத்த வேண்டும் என எல்லா தொழிற்சங்கங்களும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளன. அரச சார்பு தொழிற்சங்கங்களும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளன. அரச சார்பு தொழிற்சங்கங்களும் ஜே.வி.பி. உட்பட அனைவருமே இக்கோரிக்கையை ஆதரித்தனர். தொழில் அமைச்சரும் பெருந்தோட்டத்துறை அமைச்சரும்கூட இதற்கு ஆதரவான கருத்தையே தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட இன்னும் சில தினங்களே இருக்கும்போது இந்தத் தொழிற்சங்கங்கள் அவசரமாகக் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தத்தின்படி இன்னும் இரண்டு வருடங்களுக்குச் சம்பள உயர்வு கேட்கவோ, தொழிற்சங்கப் போராட்டம் நடத்வோ முடியாது.

இப்பொழுது வாழ்க்கைச் செலவுப்புள்ளி 3684.7 ஆக உயர்ந்துள்ளது. அதன்படி பார்த்தால் ஒரு புள்ளிக்கு நான்கு சதம் என்ற அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 350 ரூபாவாக அதிகரித்திருக்கும்.

போராட்டங்களோ, ஒப்பந்தங்களோ அவசியம் இல்லை. தானாகவே இத்தொகை கிடைத்திருக்கும். ஆனால், கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் தோட்டத்தொழிலாளர்களின் தினசரி சம்பளம் 135 ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆக 14 ரூபா மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போன்றது - என்றும் அருள்சாமி கண்டனம் தெரிவித்துள்ளார். (எ-க)

## சிறுவர், முதியோர் தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.28

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் சிறுவர், முதியோர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ். மாவட்டச் செயலக மேலதிக மாவட்ட செயலாளர் (நிதி) சு.சண்முகரட்ணம் பிரதமவிருந்தினராகவும், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் வெ.வீரபத்திரப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜே.ஏ.யேசுதாஸ் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். வரவேற்புரையை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் கை.மகேந்திரலிங்கம் நிகழ்த்துவார். தொடர்ந்து முதியோர் கௌரவிப்பு, சிறுவர், முதியோர் தினப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கலும் இடம்பெறும்.(எ)



ஆனைக்கோட்டையில் நேற்று மனநோயாளியான மகளால வெட்டிக் கொலை செய்யப்பட்ட தாயாரின் சடலம் புதைக்கப்பட்ட நிலையில்.

## கடலுணவு சந்தைப்படுத்தும் நிலையம் வேலணையில் நேற்றுத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.28

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் வேலணையில் புதிதாக நிறுவப்பட்ட கடலுணவு சந்தைப்படுத்தும் நிலையம் நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி கடலுணவை சந்தைப்படுத்தும் நிலையத்தினை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆசிய, பசுபிக் இலத்தீன் அமெரிக்கப் பிராந்தியங்களுக்கான பணிப்பாளர் நாயகம் ருவென்ரா டிரெஸ்ரு எஸ்லியும், குளிரூட்டப்பட்ட சேகரிப்பு அறைகளை உலக உணவு விவசாய நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி மசிலன் யூசுவ்வும் நாடாவை வெட்டித்திறந்து வைத்தனர்.

கடலுணவை குளிரூட்டப் பயன்படுத்தும் மின்பிறப்பாக்கியை பணிப்பாளர் நாயகத்தின் உதவியாளர் திருமதி ஜனாகோர்ன் சம்பிரதாயபூர்வமாக இயக்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், அறிமுக உரையை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கே.தர்மலிங்கமும் நிகழ்த்தினர்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன தேசியப் பணிப்பாளர் றோலண்ட் ஸ்ரியுரெக், உணவுப் பாதுகாப்பு அவசர நிலையம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கும் வளர்ச்சிக்குமான சமஷ்டி அமைச்சின் பிரிவு உபதலைவர் ரண்டல் கெபகே, சிரேஷ்ர ஆலோசகர் ஆவ்ஹரி கரட்டுவ, உலக உணவு விவசாய நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஜோசப் உட்பட குடாநாட்டில் சேவையில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கடலுணவுகளை குளிரூட்டப்பட்ட நிலையில் எடுத்துச் செல்வதற்கான வசதிகளுடன் கூடிய நான்கு வாகனங்களில் 2 குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் 2 வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கும் இந்த நிகழ்வில் வைத்து கையளிக்கப்பட்டன. (எ-5)

## கந்தரோடையில் குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.28

கந்தரோடைப் பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் கடந்த இரண்டு நாள்களாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், மேற்படி பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக மேற்படி குடிதண்ணீர் விநியோகம் மூலம் நன்மை பெற்று வந்த இப்பகுதி மக்கள் குடிதண்ணீர் விநியோகம் திடீரென இடைநிறுத்தப்பட்டதையடுத்து விசனமடைந்துள்ளனர்.

இதுவிடயமாக மேற்படி பகுதி மக்கள் உடுவில் பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (எ-6)

## நூலகத் தினவிழா

வட்டுக்கோட்டை,ஒக்.28

நூலக வாரத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியால் நடத்தப்படும் நூலக தினவிழா, இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந.சபாரெட்ணசிங்கி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் நிலைய புத்தகக் கண்காட்சியும் கலைநிகழ்வும் இடம்பெறும். (எ-161)

## நூல்களின் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.28

கலாநிதி ம.இரகுநாதனின் 'ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்' கலாநிதி சி.செல்வரஞ்சிதத்தின் 'பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை நூல்களும் மதிப்பீடும்' ஆகிய நூல்களின் அறிமுகவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆகியோரும் -

நூல் அறிமுகவுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் -

வெளியீட்டுரையை யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமநாதனும் நிகழ்த்துவர். (10-202)

## மட்டக்களப்பில் கிரனேட்டுடன் இளைஞன் கைது!

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் கிரானில் 17 வயது இளைஞரொருவர் நேற்று முன்தினமிரவு கிரனேட்டுடன் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு வாழைச்சேனைப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கிரானைச் சேர்ந்த நடராஜா சோமசுந்தரம் என்ற இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்புப் பக்கமாகப் பயணம் செய்துகொண்டிருந்த ஓட்டோ ஒன்றை வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வழிமறித்து சோதனையிட்ட சமயம் கிரனேட் கண்டுபிடிக்கப்பட்டது.

ஓட்டோவுக்குள் இருந்த இளைஞர் கைது செய்யப்பட்டர்.

ஓட்டோ சாரதியான வாழைச்சேனையைச் சேர்ந்த முஸ்தபா மொகமட் அமீர் (வயது22) என்பவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருவரும் மட்டக்களப்பு நீதிமன்ற உத்தரவின்பேரில் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். (எ-க)

## மின்கம்பத்துடன் மோதிய 'ஹை-ஏஸ்'

யாழ்ப்பாணம்,ஒக்.28

வேகமாகச் சென்ற 'ஹைஏஸ்' வான் மின்கம்பத்துடன் மோதியதில் மின்கம்பம் முறிந்து விழுந்ததுடன் வாகனத்தின் முன்பகுதியும் பலத்த சேதமடைந்தது.

நேற்று முற்பகல் பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி வீதியூடாக வேகமாகச் சென்ற 'ஹைஏஸ்' வானே இவ்வாறு இலுப்பையடிச் சந்தியில் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ். பொலீஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-13-7)

## தமிழ்ச்செல்வன் குழுவினர் அயர்லாந்தின் டப்ளினில்!

### சனிக்கிழமை வரை தங்கியிருப்பர்

கொழும்பு,ஒக்.28

மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உள்ளிட்ட அவரின் உதவியாளர்கள் அடங்கிய குழுவினரும் நேற்றுமுன்தினம் அயர்லாந்து தலைநகர் டப்ளினைச் சென்றடைந்தனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை வரை அங்கு தங்கியிருக்கும் தமிழ்ச்செல்வன் அச்சமயம் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடனும் மற்றும் பிரமுகர்களுடனும் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடுவார் எனத்தெரிகிறது.

சனிக்கிழமை அங்கிருந்து சுவிற்ஸர்லாந்தின தலைநகர் சூரிச்சுக்குச் செல்லும் அவர்கள், அங்கிருந்து கொழும்பு வழியாக வன்னிக்குத் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை சூரிச்சிலிருந்து புறப்படும் அவர்கள் திங்களன்று வன்னி வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், தற்போது இலங்கை வந்திருக்கும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியின் வன்னி விஜயத்தை திங்கள் வரை தள்ளிப்போடுமாறு புலிகள் கோரியிருக்கின்றனர் எனவும் தெரியவருகின்றது.

(எ-க)

## சினிமாப் பட வாழ்த்து மடல்களின் விற்பனையைக் கட்டுப்படுத்த முடிவு

தென்னிந்திய சினிமா நட்சத்திரங்களின் படங்கள் பொறிக்கப்பட்ட வாழ்த்து மடல்கள் மற்றும் கலண்டர்களின் விநியோகத்தையும் விற்பனையையும் கட்டுப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் முடிவு செய்திருப்பதாக அறிய வந்துள்ளது.

இதுதொடர்பாக விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் ஆயப்பகுதியினர், வர்த்தகர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

சினிமா நட்சத்திரங்களின் படங்களை மட்டும் தாங்கிய பெரும் தொகையான வாழ்த்து மடல்கள் தமிழர் பிரதேசங்களில் விற்பனைக்கு வந்திருக்கின்றன. புதிய ஆண்டு பிறக்கவிருப்பதை ஒட்டி சினிமாப் படங்களைத் தாங்கிய பெருமளவு கலண்டர்களும் கூட அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படத் தொடங்கியுள்ளன.

தமிழர் பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கும் காட்சிகள், படங்கள் மற்றும் விடுதலைப் போருடன் தொடர்புடைய ஆவணப் படங்களை கலண்டர்களிலும் வாழ்த்து அட்டைகளிலும் அச்சிட்டு ஈழத்தமிழர்களின் அடையாளத்தை பேணிக் காப்பது அவசியம் என்று பல தரப்புகளில் இருந்தும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே சினிமா மோகத்தைத் தூண்டும் வாழ்த்து அட்டைகளின் விநியோகத்தைக் கட்டுப்படுத்தப் புலிகள் தீர்மானித்திருக்கின்றனர் என்று அறிய வந்தது.

சினிமாப் படங்கள் அச்சிடப்பட்ட தீபாவளி வாழ்த்து மடல்களைத் தொகையாக எடுத்து வந்து விற்பனை செய்வதை ஆயப்பகுதியினர் தடைசெய்திருக்கின்றனர். புளியங்குளம் சோதனை நிலையம் ஊடாக இவற்றை எடுத்து வருவது கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

விமான மார்க்கமாகக் குடாநாட்டுக்குள் இத்தகைய அட்டைகளை எடுத்துவந்து விநியோகிப் போருக்கும் ஆயப்பகுதியினர் அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கின்றனர் என்றும் தெரியவந்தது. (ஐ)

## அஞ்சலிக் கூட்டம் கடைசி நேரத்தில் ரத்து

யாழ்ப்பாணம்,ஒக்.28

கடந்த செவ்வாயன்று மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்ட வங்கியாளர் கிங்ஸ்லி இராஜநாயகத்தின் நினைவாக யாழ்.நகரில் நேற்று நடத்தப்படவிருந்த அஞ்சலிக்கூட்டம் கடைசி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

அமரர் கிங்ஸ்லி இராஜநாயகம் நினைவுக் குழுவின் ஏற்பாட்டில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புகள் நிறுவன மண்டபத்தில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அஞ்சலிக்கூட்டம் ரத்தானமைக்கான காரணம் தெரியவரவில்லை. (எ)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# உலகத்தின் ஆதாரம் விஞ்ஞானமென விரிவாக விளக்கும் கண்காட்சி

## விஞ்ஞான தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கு வெளிமாவட்ட மாணவர்களும் குவிந்துள்ளனர்

**யாழ்.**பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் நடத்தும் விஞ்ஞானக்கண்காட்சி இன்று மூன்றாவது நாளாகத் தொடர்கின்றது.

நவீன தொழில்நுட்ப உலகில் விஞ்ஞானத்தின் போக்கு, அதன் வளர்ச்சி, பயன்பாடு என்பனவற்றைப் பற்றிய பூரணமான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மழையையும் பாராது மாணவர்களும், மக்களும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு விரைவதைக் காணக் கூடியதாக இருந்தது.

கண்காட்சிக்கு வரும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும், மக்களினதும் அறிவுப் பசிக்கு ஆகாரமாக விஞ்ஞான் பீடமாணவர்கள் வழங்கும் விளக்கங்கள் மீண்டுமொருமுறை கண்காட்சியைப் பார்க்கத் தூண்டுகின்றது. அந்தளவுக்கு விஞ்ஞானபீட மாணவர்கள் தெளிவுடனும, நிதானத்துடனும், பொறுமையுடனும் விளக்கங்களை வழங்குவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நேற்று விடுமுறை தினமாக இருந்த படியால் பெருமளவான மக்களும், மாணவர்களும் கண்காட்சியைப் பார்வையிட வந்திருந்தனர். குறிப்பாக வெளிமாவட்டங்களிலிருந்தும் பெருமளவான மாணவர்கள் நேற்றுப் படையெடுத்தனர். மட்டக்களப்பு மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து பஸ்களில் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் வந்திருந்தனர்.

மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கண்காட்சியைப் பார்வையிட வந்த மாணவர்கள் அங்கு எமது செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல்கள் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

கண்காட்சியைப் பார்வையிடுதற்கு யாழ.வந்து போகும் செலவாக மட்டக்களப்பிலிருந்து வந்த மாணவர்கள் ஒவ்வொருவரும் தலா ஆயிரத்து 500 ரூபாவும், மன்னாரிலிருந்து வந்த மாணவர்கள் தலா ஆயிரம் ரூபாவும் செலுத்தியுள்ளனர். இதுபற்றி அவர்களிடம் கேட்ட போது இப்படியானதொரு கண்காட்சியைப் பார்வையிடுவது தான் எமது முக்கிய குறிக்கோளாக இருந்தாக அவர்கள் தெரிவித்தனர். இவ்வளவு பெரிய தொகைப் பணத்தைச் செலுத்தி இந்தக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வந்திருந்தமை குறித்து கண்காட்சிக்கு வந்திருந்த சில யாழ்ப்பாணத்துப் பெரியவர்கள் வியப்புடன் பேசிக் கொண்டனர்.

அத்துடன் வெளிமாவட்டங்களிலிருந்து வந்த மாணவர்கள் கண்காட்சியில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் அவதானமாகவும் ஆறுதலாகவும் பார்வையிட்டமை அனைவரையும் கவர்ந்தது. அந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் எமது செய்தியாளர்கள் செவ்வி கண்டனர். அதன் போது அவர்கள் தெரிவித்த விடயங்கள் இதோ:-

**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**
**ஆசிரியை**
**திருமதி சச்சிதானந்தம் மிருணாளினி**



கணனி என்பது எமது பாடசாலை மாணவர்களில பெரும்பான்மையினரைப் பொறுத்தவரையில் படங்களில் பார்த்ததும் கேள்விப்பட்டதுமேயன்றி அவற்றை நேரில் பார்த்தவர்கள் மிகவும் குறைவு.

ஆனால், இக்கண்காட்சியில் எமது மாணவர்களில் ஒரு பகுதியினர் கணனியென்றால் என்ன், அது எப்படியிருக்கும், அதனுடைய தொழிற்பாடுகள் என்னவென்பதை நேரில் கண்டறிந்துள்ளமை அவர்களுக்கு ஒரு தூண்டல் சக்தியையும் தேடல் ஆற்றலையும் ஏற்படுத்தியுள்ளது.

**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**
**மாணவி**
**-செல்வி அந்தோனிப்பிள்ளை விஜிசாந்தினி**



கணனி என்பது பற்றி கேள்விப்பட்டு இருக்கின்றேன். ஆனால், பார்த்தது இல்லை. யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானக் கண்காட்சியில் நேரடியாக கணனியைப் பார்த்ததுடன் அதன் செயல்பாடுகளையும் கண்கூடாகப் பார்த்து அறிந்து கொண்டேன்

இத்துடன் சில கணக்குகளையும் கூட நான் கணனியில் செய்து பெறுபேறுகளையும் பெற்றது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது. கணனியைக் கற்கவேண்டும் என்ற ஆவலும் எதிர்பார்ப்பும் கூட ஏற்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டுசுட்டான் கற்சிலை மடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பொன்னுத்துரை அருமைச்சந்திரன்**



எமது பாடசாலை பின்தங்கிய ஒரு பாடசாலையாகும். எமது பாடசாலைப் பிள்ளைகளைப் பொறுத்தவரை கணனிகளைப் பார்த்ததும் இல்லை. வெறுமனே ஏட்டு வடிவத்தில் கேள்விப்பட்டு இருக்கின்றார்கள்.

இன்று கண்காட்சிக்கு மாணவர்களைப் பொருளாதார கஷ்டத்தின் மத்தியிலேயே அழைத்துவந்துள்ளேன். இங்கு எமது பாடசாலைப் பிள்ளைகள் இக்கண்காட்சியில் கணனிகளைப் பார்ப்பதில் கூடிய அக்கறையும் ஆர்வமும் காட்டினார்கள்.

தொகுப்பு:
தேவா,நவம்
படங்கள்:
தீபன்

எதிர்காலத்தில் எமது பாடசாலைக்கும் கணனிகளைத் தருவதாக கல்வித் திணைக்களத்தினர் கூறியுள்ளனர். பிள்ளைகள் இங்கு கணனியைப் பார்த்தமை, அதனுடைய செயற்பாடுகளைக் கண்கூடாகப் பார்த்தமை எமது பாடசாலைக்குக் கணனி கிடைக்கும்போது ஆர்வமுடன் கற்பதற்கு மாணவர்களைத் தூண்டியுள்ளது என்பதையிட்டு சந்தோஷம் அடைகின்றேன்.

**கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த செல்வி இராமச்சந்திரன் கிருஷ்ணவேணி**



இத்தகைய வசதிகள் எவையும் எமது பாடசாலையில் இல்லை. கணனிகளைப் பார்க்கும் போதே ஏதோ ஒரு புதிய பொருளைப் பார்ப்பது போன்ற உணர்வே ஏற்படுகின்றது. எமது பாடசாலைக்கும் கணனிகள் கிடைக்க வேண்டும். நாங்களும் பிள்ளைகளும் கற்க வேண்டும்.

**மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலய உப அதிபர் திருமதி மோகனராசா வசந்தகுமாரி**



நீண்டதூரத்தில் இருந்து நாம் இக் கண்காட்சியைப் பார்வையிட வந்துள்ளோம். இங்கு வந்து பார்த்தபின்பு எமக்கு எவ்வளவோ பயனுடைய பாடங்களுடன் தொடர்புடைய விடயங்களை பிள்ளைகள் பார்வையிட்டுள்ளதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். எமது பிள்ளைகள் பல விடயங்களையும் புத்தகங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள்மூலம் பார்த்துள்ளார்கள் கேட்டுள்ளார்கள்.

இங்கு இடம்பெற்ற கண்காட்சியில் நேரடியாக இவற்றைப்பார்வையிட்டுள்ளமை மாணவர்களுக்குக் கூடிய ஆற்றலை வளர்க்க வழியேற்பட்டுள்ளது.

**கல்லடி விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலய மாணவி செல்வி விவேகானந்தராசா விஜயமயூதினி**



எமது பாடசாலையில் போதியளவு ஆய்வு கூட உபகரணங்கள் இல்லை. இங்கு வந்து நாம் நேரடியாக ஆய்வுகூடங்களையும் உபகரணங்களையும் நேரில் பார்த்தமை எமது எதிர்காலக் கல்விக்கு எவ்வளவோ பெரும் துணையாக இருக்கிறது.

புத்தகங்கள், பாடங்களில் சிலவற்றைப் பற்றி அறிந்துள்ளோம். இங்கு நேரடியாகச் செய்முறைகளையும் கூட எமது ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சைக்குப் பயன்படக்கூடிய முறையில் செய்துகாட்டியுள்ளார்கள். இதன்மூலம் நாம் எமது கல்வியை மேலும வளர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எமது அதிபர் இக்கண்காட்சியைக் காவனமாகப் பார்க்கவேண்டுமென எமக்கு அறிவுறுத்தி அனுப்பிவைத்தார். உண்மையில் பயனுள்ள கண்காட்சியொன்றுக்கு எம்மை அழைத்து வந்த ஆசிரியர்களும் அனுப்பிவைத்த அதிபரையும் மாணவர்கள் சார்பில் பாராட்டுகின்றேன்.

**மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் இரசாயனவியல் ஆசிரியை செல்வி யோகநாதன் கௌசலா**



எமது பாடசாலை மன்னார் மாவட்டத்தில் ஒரு தேசியப் பாடசாலையாக இருக்கின்றபோதிலும் விஞ்ஞான பாடங்களுக்கான முழு ஆய்வுகூட உபகரணங்களையோ, இரசாயனப் பொருள்களையோ கொண்டிருக்கவில்லை..

இக்கண்காட்சியில் எமது மாணவ, மாணவிகள் அதிக பயன்பாட்டைப் பெற்றுள்ளார்கள். விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் பலவற்றை இனம் கண்டுள்ளதுடன், செயல்முறைப் பயிற்சிகளையும் பார்த்துள்ளார்கள்.

**மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி மாணவிகளான செல்விகள் நுஸாஹா சாயிறபீக், செபமாலை இராஜசிங்கம், சியாமளா**




எமது பாடசாலையில் முழுமையான இராசயானப் பொருள்கள் இல்லை. அத்துடன் கிடைக்கும் இரசாயனப் பொருள்களும் கூட காலம் கடந்தவையாகவும், பழுதடைந்தவையாகவுமே காணப்படுகின்றன.

இப்பொருள்களைப் பயன்படுத்தி ஆய்வுகள்ள மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் பிழையான பெறுபேறுகளைப் பெறுகின்ற நிலையும் காணப்படுகின்றது.

இக் கண்காட்சியில் நாம் இரசாயன. பௌதிக, உயிரியல் ஆய்வுகூடங்களையும் உபகரணங்களையும் முழுமையாக நேரில் பார்வையிட்டுள்ளதுடன், புதிய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு சரியான பெறுபேறுகளையும் உரிய முறையில் பெற்றுள்ளோம். இக்கண்காட்சி எமது ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞான மாணவ சமுதாயத்திற்கு ஒரு வரப்பிரசாதம்.

★

கண்காட்சியை மிகவும் அவதானமாகப் பார்வையிடும் கிளிநொச்சி மாவட்ட மாணவிகள்.



# விலங்கியல்த் துறை

உயிரினங்கள் எவ்வாறு தோன்றின? அவை எங்கிருந்து வந்தன? நாம் எவ்வாறு தோன்றினோம்? எமது மூதாதைகள், நெருங்கிய உறவுகள் யார்? எதன் விழுதுகளாக நாம் உருவெடுத்தோம்? இவற்றை அறிந்து கொள்ளும் ஆவல் உங்களுக்கு இருக்கின்றதா? அப்படியாயின் நீங்கள் நிச்சயமாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட விஞ்ஞானக் கண்காட்சியிலேயே விலங்கியல் துறையை பார்வையிட்டே ஆகவேண்டும்.

அந்தளவு சிறப்பாக இந்த உயிரின மண்டலம் தோற்றம் பெற்றதிலிருந்து இன்றுவரை உயிரினங்கள் எவ்வாறு கூர்ப்புக்கு உள்ளாகின என்பதும், ஒவ்வோர் உயிரினமும் குறிப்பாக மனிதன் தனது ஆரம்ப நாளில் இருந்து இன்றுவரை எந்தெந்த சவால்களுக்கு முகம் கொடுத்தான் என்றும் - எவ்வாறு அவற்றை வெற்றிகொண்டான் என்பதும் அதன் விளைவாக அவன் சூழலில் ஏற்படுத்திய பாதிப்புகளும் அவற்றுக்கான தீர்வுகளும் என்ன என்பதை விலங்கியலததுறை விரிவாக விளக்குகின்றது.

எவ்வளவு தூரம் ஆரம்ப உலகை யதார்த்தமாகச் சிருஷ்டிக்க முடியுமோ அந்தளவுக்கு பாரிய மாதிரிகள் வெவ்வேறு காலப்பகுதிகளிலே வாழ்ந்த மனித இனங்கள், விலங்கு இனங்கள் என பிரமாண்டமான காட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டு அவற்றுக்குரிய ஒலி வடிவங்கள் கொடுக்கப்பட்டு வியக்கத்தக்க வகையிலே சிறப்பாக அமைத்துள்ளார்கள் விலங்கியற்துறை மாணவர்கள்.

பாடசாலை மாணவர்களின் மத்தியில் விஞ்ஞான அறிவை வளர்க்கவும் அவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் விலங்கியல் கண்காட்சி மாதிரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பல்கல அங்கிகளின் அக உடலமைப்பு உடற்செயற்பாடு, உடற்றொழிலியல் என்பன மாதிரிகளுக்கூடாகவும் நேரடி வெட்டிப்பரிசோதிப்புகளுக் கூடாகவும் மாணவர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளகூடிய வகையிலும் விளக்கப்பட்டுள்ளன.

மனிதனைத் தாக்கும் பிரதான ஒட்டுண்ணி நோய்களும் அந்நோய்க் காரணிகளைக்காவும் பூச்சியினங்களின் உயிரியலும் மாதிரிகளுக்கூடாகவும் ஒளிப்பட பிரதிகளூடாகவும் மாணவர்களுக்கு தெளிவான அறிவை வழங்கவுள்ளதுடன், எவ்வாறு நோய்க் காவிகளின் தாக்கத்திலிருந்த எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்பதையும் பார்வையாளர்களுக்குப் புரியவைக்கின்றது. குறிப்பாக இலங்கையில் அதுவும் வன்னிப்பெரு நிலப்பரப்பை அண்டிய பிரதேசங்களில் பரவி வரும் 'லிஸ்மனியாசிஸ்' (Leishmaniasis) நோய் தொடர்பான விழிப்புணர்வையும் இக்கண் காட்சி விளக்குகின்றது.

சூழலியல், சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தத்துவங்களும், மனிதன் தன் சூழலில் ஏற்படுத்தும் தாக்கங்களும் அதன் விளைவுகளும் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நிலையான அபிவிருத்தியிலும் சூழல் பாதுகாப்பிலும் ஒன்றிணைந்த பீட முகாமைத்துவத் திபங்கும் அதன் அமைப்பும் ஒரு மாதிரி வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல்வேறு சூழற்சாகியங்களில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த முருகைக் கற்சூழற்சாகியம்' விலங்கியல் துறையில் இயற்கையானதா அல்லது செயற்கையானதா என்ற ஐயப்பாட்டைப் பார்வையாளர் மத்தியில் நிச்சயம் ஏற்படுத்தும்.

- விஞ்ஞானநேசன்.


இரசாயனவியல் பகுதியில்


இலத்திரனியல் பகுதியில்

# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானக் கண்காட்சியிலிருந்து....



மீன்பிடி டிப்ளோமாப் பகுதியில் சேதுசமுத்திரத் திட்டம் குறித்த மாதிரி




உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியை சித்திரிப்பவை

# சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஏ.சி.சி.ஏ. பயிற்சி நெறிகள் இங்கும் ஆரம்பம்

Association of Chartered Certified Accountants (ACCA) நூறு ஆண்டுகளை பூர்த்திசெய்கிறபடியால் இந்த ஆண்டில் இது சம்பந்தமாக பேசப்படும் விடயம் பொறுப்பு (Responsibility). இதனுடைய ஆரம்பகட்டத்திலிருந்து ACCA உயர்ந்த விழுமியங்களை மேம்பாடையச்செய்வதற்கும் பொதுமக்களின் நன்மை கருதி வேலை செய்வதற்கும் தனிப்பட்டமுறையில் திறமையிலும் விண்ணப்பத்தின் அடிப்படையிலும் சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு உதவியாக இருந்து வருகிறது. இதன் கருத்துக்கள் ACCA இன் வழிகாட்டல் கொள்கைக்கும் அடித்தளமாக விளங்குகிறது.

இங்கு சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு உண்மையாக இருந்ததினால் ACCA உலகம முழுவதும் உள்ள மக்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. இதன் வரலாறு முழுவதும் இது வேலை செய்யும் இடங்களில் உயர்ந்த தரங்களையும் தொழில் வழிகாட்டல், சர்வதேச தொடர்பு அத்துடன், மாற்றங்கள் போன்ற பண்புகளை அமைத்துக்கொடுத்துள்ளது.

இதனால்தான் ACCA கற்கைநெறி இன்று உலகம் முழுவதும் உள்ள அநேக மாணவர்களால் விரும்பப்படுகிறது. அத்துடன், இது இன்றைய உலகத்தில் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற தொழில்சார் அமைப்பாகவுள்ளது.

உங்கள் பொருளாதார தராதரத்தை உயர்த்தும் ஒரு வேலைவாய்ப்பை ஆலோசிக்கிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் ACCA ஐ கருத்தில்கொள்ள வேண்டும்.

ஏன்?

★ ACCA பரீட்சை உலகம் முழுவதும் கணக்கியலிலும் நிதியியலின் எல்லாப்பகுதிகளிலும் தொடர்புடையதாகவும் அங்கீகரிக்கப்பட்டதாகவும் காணப்படுகிறது.

★ இது உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்டபடியால் உங்கள் வாழ்க்கைப் பின்னணியில் தங்கியிருக்காமல் உங்கள் வாழ்கையின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு உதவியாகவுள்ளது.

★ கற்றலிலும் பயிற்சியிலும் மாணவர்களின் தன்மைக்கேற்ப வளைந்துகொடுக்கக் கூடிய அணுகுமுறையைக் கொண்டுள்ளது. இது நீங்கள் ஒரு வேலையில் இருக்கும் காலத்தில் உங்கள் படிப்பை ஒரு காலஇடைவெளியின் பின் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கிறது.

★ சர்வதேச கணக்கியல் கற்கைநெறியானது தேசியரீதியானதும் உலகளாவிய ரீதியான வியாபார சூழலிலுடன் தொடர்புடையது.

★ ஐக்கிய நாடுகள் மற்றும் உலக வங்கி போன்ற நிறுவனங்களால் உலகளாவியரீதியில் உயர்ந்தளவில் இந்தக் கற்கைநெறி அங்கீகரிக்கப்படுகிறது.

★ நவீன தொழில்நுட்ப கணக்கியல் பரீட்சைக்கும் அதன் பயிற்சிக்கும் நவீன மாற்றங்களுடன் கூடிய அணுகுமுறைக்கு நவீன தொழில்நுட்பம் துணைபுரிகிறது.

**அனுமதி பெற தேவைப்படுபவை .**

ACCA பதிவினை மேற்கொள்வதற்கு தேவைப்படுபவை க.பொ.த. உயர்தரத்தில்(A/L) அத்துடன் க.பொ.த. சாதாரணதரத்தில் ஆங்கிலம், கணிதம் உட்பட 3 பாடத்தில் சித்தி.

மாணவர்கள் பட்டதாரியாகவோ அல்லது தொழில்சார் கணக்கியல் தராதரமுடையவராகவிருந்தால் ACCA இன் பகுதி I, பகுதி II பரீட்சை விதிவிலக்கிற்கு தகுதியுடையவர்கள்.

உங்கள் முதல் பட்டத்தின் வெற்றி - தொழில்சார் கற்கைநெறியினை முடிக்கும்போது இந்த ACCA கற்கைநெறி மட்டுமே ஒரு B.Sc. பட்டத்தினைக் கொடுக்கிறது.

## தொழில் வழிகாட்டி

ACCA தொழில்சார் கணக்கியலுக்குள் உலகளாவிய மாற்றங்களை ஏற்படுத்தும் முன்னோடியாக இருப்பதால் மாற்றங்களை ஏற்படுத்தும் பங்காளர்களான ACCA மற்றும் Oxford Brooks University of UK ஊடாக பிரயோக கணக்கியலில் B.Sc. Honours என்ற பட்டத்தினை நீங்கள் பெறுவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குகிறது.

ACCA மாணவர்கள் இப்பொழுது ACCA பரீட்சையின் பகுதி II வெற்றிகரமாக முடித்து, பிரயோக கணக்கியலில் B.Sc. (Hons) என்ற பட்டத்தினை பெறும் சந்தர்ப்பத்துடன் ஒரு ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிககும் ஒருவருக்கு மேலதிகமாக 50 பவுன்ஸ் மட்டுமே செலவாகிறது. தொழில் அபிவிருத்துக்கு ஒரு விரைவான பாதையாகவும் கல்விசார் தொழில்சார் தராதரங்களுக்கு இரட்டை வெற்றியாகவும் அமைகிறது.

ACCA ஆனது Oxford Brookes University உடன் இணைந்து MBA கற்கை நெறிகளை பிரத்தியேகமாக கணக்காளர்களுக்காக ஆரம்பித்துள்ளது. MBA யானது வியாபார விளக்கங்களை விரிவுபடுத்துவதற்கும் முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கும் ஏற்ற விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய கற்பிக்கும் முறைகளினால் துணைபுரியப்படுகிறது.

க.பொ.த சாதாரணத்துடன் உடன் ACCA - நம்பமுடியாது ஆனால் உண்மை.

க.பொ.த. சாதாரணம் முடித்து ACCA கற்கைநெறியினை தொடர விரும்பும் ஒருவருக்கு ACCA CAT கற்கைநெறிகள் கணக்கியல் சம்பந்தமான துறைகளில் வேலை செய்வதற்கு தேவையான ஆரம்ப அறிவு, திறன்கள், விளக்கம் போன்றவற்றை வழங்குகிறது.

இது பகுதி I பரீட்சை எடுக்காமல் ACCA தொழில்சார்ந்த தராதரத்திற்கு இது வழிவகுத்து கொடுப்பதன்மூலம் ACCA இற்கு நேரடியான தொடர்பை ஏற்படுத்துவது மாத்திரமில்லாமல், வேலைவாய்ப்புக்களையும் அதிகரித்துக்கொடுக்கிறது. நடைமுறைப்பயிற்சிகளை பூர்த்திசெய்யும் உறுதிப்படுத்தப்பட்ட தராதரமுள்ள கணக்கியல் நிபுணர்கள் CAT என்ற பட்டத்தையும் அடைகிறார்கள்.

**தகுதிவாய்ந்த**

**பரீட்சார்த்திகளுக்கான திறவுகோல**

21 வயதிற்கு மேற்பட்டவர்கள் இதற்கு தகுதிவாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் ACCA இல் இணைவதற்காக 1.1 Financial Statement, 1.2 Financial Information for Management போன்ற வினாத்தாள்களை எழுதவேண்டியுள்ளது. இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு 4 சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகிறது. இந்த இரண்டு வினாத்தாள்களை வெற்றிகரமாக முடிக்கும் ஒருவர் மற்றைய ACCA மாணவர்களுடன் இணைய முடியும்.

ACCA இற்கான புதிய வகுப்புகள் நவமபர் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகின்றன.

பயிற்சிகள் தராதரம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் நடத்தப்படுகின்றன.

*மேலதிக விபரங்களுக்கு*
*யுனிவென்சர்ஸ்,*
*55, மார்ட்டின் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்.*

*- விபுல் விக்கிரமசிங்க்*

# அச்சுவேலிப் பொலீஸார் விழிப்புணர்வுப் பிரசாரம்

அச்சுவேலி,ஒக்.28

அச்சுவேலிப் பொலீஸ் நிலையப் பிராந்தியத்தில் திருட்டு மற்றும் கடையுடைப்புச் சம்பவங்களைத் தடுத்துநிறுத்துவது தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸார் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் ஒலி பெருக்கிகள் மூலம் பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கிவருகின்றனர்.

அண்மைக்காலத்தில் இரவு வேளைகளில் வர்த்தக நிலையங்களில் கூரைகள் பிரித்தும் வீடுகள் உடைத்தும் திருடும் சம்பவங்கள் அதிகரித்துவருவதை அடுத்தே இவ் விசேட செயற்திட்டத்தை பொலீஸார் நடைமுறைப்படுத்துகின்றனர்.

குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான விதிமுறைகளடங்கிய துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் இவ்விடயம் தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் அறிவித்தும் பிரசாரம் இடம்பெறுகிறது.

இந்நடவடிக்கையை அச்சுவேலிப் பொலீஸ நிலையப் பொறுப்பதிகாரி சஞ்சீவ் பண்டார, குற்றத் தடுப்புப் பிரிவு பொலீஸ் அதிகாரி விஜயசேகர, போக்குவரத்து பிரிவு சார்ஜண்ட் றபால்டின் ஆகியோர் அடங்கிய குழுவினர் முன்னெடுத்துவருகின்றனர்.

(ஐ-11-204)

# வைத்தியர்களது சம்பளப் பணம் எழுதுவினைஞரால் கையாடல்

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் சிலரது மாதாந்த சம்பளப் பணத்தில் சுமார் 30 லட்சம் ரூபாவை அவர்களது சம்பளப் பட்டியலைத் தயாரிக்கும் எழுதுவினைஞர் திட்டமிட்டுக் கையாடியுள்ள சம்பவம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும். தெரியவருவதாவது:

விசேட பயிற்சிநெறிகளின் பொருட்டும் வேலைவாய்ப்புப் பெற்றும் லீவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள குறிப்பிட்ட வைத்தியர்களின் சம்பளம் அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு மாதந்தம் அனுப்பப்பட்டுவந்தன.

குறிப்பிட்ட எழுதுவினைஞர் இச் சம்பளத் தொகைகளை தமது பெயரிலுள்ள நான்கு வெவ்வேறு வங்கிகளின் கணக்குகளுக்கு வைப்புச் செய்து வந்துள்ளமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து குறிப்பிட்ட எழுதுவினைஞரின் வங்கிக்கணக்குகளை முடக்கி வைக்குமாறு சம்பந்தப்பட்ட வங்கிகளை வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட எழுதுவினைஞர் தலைமறைவாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.(10)

உதயன்

# அமெரிக்கத் தேர்தலும் ஈழத்தமிழர்களும்

உலகப் பெரும் வல்லரசான - சர்வதேசப் பொலீஸ்காரனான - அமெரிக்கா, அடுத்த நான்கு ஆண்டுகளுக்குத் தன்னை ஆட்சி செய்யப்போகும் தலைவர் யார் என்பதை இன்னும் ஐந்து நாள்களில் - அடுத்த செவ்வாயன்று - தெரிவுசெய்யப்போகின்றது.

தற்போதைய ஜனாதிபதியும் குடியரசுக் கட்சி வேட்பாளருமான ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தொடர்ந்து ஆட்சியில் நீடிப்பாரா அல்லது ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோன் கெரி அதிகாரத்தைப் பிடிப்பாரா என்பது அடுத்த சில நாள்களில் தெரிந்துவிடும்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இந்தத் தேர்தல் முடிவுகள் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே கேள்வி.

ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவாகக் கூடிய புஷ், கெரி ஆகிய இருவரின் தனியாள் போக்குகளை, சிந்தனைகளை விட்டு அவர்கள் சார்ந்த கட்சிகள் இலங்கை விவகாரத்தில் தமிழர்களைப் பரிவோடு நோக்கும் போக்குடையனவா என்று பார்ப்பது இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லது.

உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் சர்வதேச ரீதியாகப் பல நாடுகளிலும் அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு, நவீன உலகில் விடுதலை வேண்டி புரட்சியும், கிளர்ச்சியும் செய்து வரும் போராளி மக்களை வேதனைக்கு உள்ளாக்கியிருக்கின்றது என்பது வெள்ளிடைமலை. இஸ்லாமிய அடிப்படைவாதக் கோட்பாடுகளைக் கொண்ட நாடுகளிலும் - அந்தச் சிந்தனையில் ஊறிய மக்களிடமும் - இதுவிடயத்தில் அதிக கசப்புணர்வு உண்டு என்பதும் தெரிந்த அம்சம்தான். இதனால் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கு எதிரான சர்வதேச எரிச்சல் மிகுந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக அமெரிக்காவுக்கு வெளியில் - அடக்கப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட சமூகங்களின் மனதில் - கெரிக்குச் சார்பான பரிவுப் போக்குக் காணப்படுகின்றது.

ஈழத்தமிழர்களின் மனநிலையும் இதற்கு வேறானதாக இல்லை என்பது உண்மையே. ஆனால், இதற்காக கெரி வெல்லவேண்டும் என்று எதிர்பார்ப்பதோ அதனால் ஈழத் தமிழருக்கு நன்மை கிட்டும் என்று நம்புவதோ அர்த்தமற்றது.

உண்மையில் ஜோன் கெரியின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோதே ஈழத்தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளைத் தனது நாட்டின் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்தது அமெரிக்கா. அந்த இயக்கத்தின் செயற்பாட்டுக்குத் தனது நாட்டில் தடையும் விதித்தது.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் காலத்தில் அந்தத் தடை தொடர்ந்தது என்பது சரிதான். ஆனால், அமெரிக்காவில் புலிகள் தொடர்பாகப் பெரும் கெடுபிடி நடவடிக்கை ஏதும் புஷ்ஷின் காலத்தில் எடுக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளின் சட்டஆலோசகர் விஸ்வநாதன் உருத்திரகுமார் கூட அமெரிக்காவிலிருந்து புலிகளின் நடவடிக்கைகளுக்கு வந்துபோக அனுமதிக்கப்பட்டார். வன்னிக்கு வந்து புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கவும், அமைதிப் பேச்சுக்களில் புலிகளன்வள ஆலோசகராகப் பங்குபற்றவும் சர்வதேச ரீதியிலான புலிகளின் ஆய்வுக்கூட்டங்களில் கலந்துகொள்ளவும் அமெரிக்கப் பிரஜையான ஈழத்தமிழர் உருத்திரகுமாருக்குத் தடை, தொல்லை, தொந்தரவுகள் எதுவும் கொடுக்கப்படவில்லை.

ஆக, புலிகள் தரப்பின் கட்டுமட்டான செயற்பாட்டுக்குப் புஷ் நிர்வாகம் கண்டும் காணாமலும் அனுமதி அளித்தது என்பதே உண்மை.

ஆனால், மறுபுறத்தில் இலங்கை அரசுத் தரப்புடனும் அதிகம் நெருங்கிச் சென்றது புஷ் நிர்வாகமே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இலங்கைப் படைகளுக்கு அமெரிக்க இராணுவப் பயிற்சி, அமெரிக்கக் கடற்படையின் ரோந்துக் கப்பல் விநியோகம், இருதரப்பு இராணுவப் புரிந்துணர்வுக் கூட்டுச் செயற்பாடு, அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய இராணுவக் கட்டளையகத்துக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு இணை நடவடிக்கைகள், அமெரிக்காவின் மிலேனியம் உதவித்திட்டத்தின்கீழ் உதவிபெறத் தகுதியான 16 நாடுகளின் பட்டியலில் ஒரேயோர் ஆசிய நாடாக இலங்கை சேர்க்கப்பட்டமை போன்ற பல்வேறு வகையான தென்னிலங்கை அரசுசார்பான நடவடிக்கைகளைப் புஷ்ஷின் அரசே மேற்கொண்டது என்பதை நாம் மறக்க - மறுக்க - முடியாது.

அடக்குமுறைக்கும் அரச பயங்கரவாதத்துக்கும் எதிராக நியாயமான உரிமை வேண்டிப் போராட்டம் நடத்தும் பல்வேறு இனக் குழுமங்களையும், போராளிகளையும், உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான தனது போராட்டத்தின் எதிரிகளினின்றும் வேறுபடுத்திப் பார்க்கும் தெளிவுடைய ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியாக வருவதே அடக்கப்பட்ட மக்களுக்கு மீட்சி தருவதாக அமையும்.

# இலங்கையில் இந்தியத் தலையீடு: ஆராய்வதற்குப் புதுடில்லியில் மாநாடு

கொழும்பு,ஒக்.28

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் இந்தியாவின் தலையீடு பற்றி ஆராய்வதற்காக நாளை மறுதினம் சனிக்கிழமை புதுடில்லியில் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் இனப்பிரச்சினைக்கான தீர்வை அடிபடையாக வைத்தும் இந்தியாவின் தேசிய நலன்களைக் கருத்திற்கொண்டும் இந்தியா பேச்சுக்களில் தலையிடுவது எவ்வாறானதாக அமையவேண்டும் என்பது குறித்தே மாநாடு நடைபெறவுள்ளதாக மாநாட்டு ஏற்பாட்டாளர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச ரீதியில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை விளக்குவதாகத்தான் இந்த மாநாடு அமையும்.

இந்த மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து புத்திஜீவிகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளை அழைக்கவுள்ளோம். பெரும்பாலான இந்தியப் பிரதிநிதிகளுடன் சீனாவிலிருந்து இரண்டு புத்திஜீவிகளும், இஸ்ரேல், நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒரு புத்திஜீவியும் இந்த மாநாட்டில் கலந்துகொள்வர்.

அத்துடன், இலங்கையிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட இரண்டு பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

இலங்கைத் தமிழ்க் குழுவொன்றினால் அமெரிக்க பெல்மொன்ட் என்ற இடத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட மாநாட்டின் தொடர்ச்சியாக நடத்தப்படும் இம்மாநாட்டில், நோர்வேயின் அனுசரணை முயற்சியில் தற்போது தடைப்பட்டிருக்கும் சமாதான முயற்சிக்கான மாற்று வழிகள் குறித்தும் ஆராயப்பட உள்ளதாம்.

(ஐ-13-202)




சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் சேகர் ஞாபகார்த்த கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் வடபகுதி அணி வெற்றியீட்டி சேகர் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

வெற்றியீட்டிய அணிக்கான கிண்ணத்தை சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் நகுலன் வழங்கிக் கௌரவிப்பதை முதல் படத்திலும், வெற்றியீட்டிய அணியினரை அடுத்த படத்திலும் காணலாம்.

23.10.2000ஆம் ஆண்டு ஓயாத அலைகள் - 04 நடவடிக்கையின்போது சிறப்புத் தளபதி சேகர் வீரச்சாவடைந்தார். அவரது ஞாபகார்த்தமாக வடபகுதி, மத்திய பகுதி, தென்பகுதி தாக்குதல் அணிகள் இடையே கடந்த 22, 23, 24 ஆகிய தினங்களில் இந்தச் சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது. (ஐ-3)

# சாவகச்சேரியில் இடம்பெற்ற சமாதானத்திற்கான சிலுவை யாத்திரை

சாவகச்சேரி,ஒக்.28

சமாதானத்திற்கான சிலுவை யாத்திரை கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்குச் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

இந்த யாத்திரை சாவகச்சேரி வேம்படிச் சந்தியில் ஆரம்பமாகிக் கச்சாய் வீதி வழியாக லிகோரியார் தேவாலயத்தை அடைந்தது. இவ்வூர்வலத்தில் கலந்துகொண்ட மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் சமாதானக் கீதங்களைப் பாடியவாறு வெள்ளைக்கொடிகளையும், சமாதானத்திற்கான பதாகைகளையும் தாங்கிச் சென்றனர். ஊர்வலத்தின் இறுதியில் சமாதானத்துக்கான சிலுவை எடுத்துச்செல்லப்பட்டது.

இச்சிலுவை வடக்கையும் (பனை), கிழக்கையும் (தென்னை) இணைக்கும் விதத்தில் பனை மற்றும் தென்னை மரங்கள்ால் ஆக்கப்பட்டு இயேசுவின் திருவுருவமும் பொறிக்கப்பட்டிருந்தது.

லிகோரியார் தேவாலயத்தில் சமாதானத்திற்கான உரைகளும், சமாதான கீதங்களும் இடம்பெற்றன. உரைகளைச் சாவகச்சேரிப் பங்குத்தந்தை எஸ்.சிவச்சந்திரன் அடிகளார், மன்றக் கட்டுப்பாட்டுப் பங்குத் தந்தை றொய் பேடினன் அடிகளார் மற்றும் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபைப் போதகர் எஸ்.வசந்தகுமார் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தினர்.

இச்சமாதானச் சிலுவை யாத்திரை தொடர்ந்து வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் நேற்றுமுன்தினம் சென்றது.

(10-31-204)

# சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

வலி.தெற்கு,ஒக்.28

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 41 சனசமூக நிலையங்களுககு 2004ஆம் ஆண்டுக்கான நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

நாற்பது சனசமூக நிலையங்களுக்குத் தலா ஆயிரத்து 600 ரூபா வீதமும், ஒரு சனசமூக நிலையத்திற்கு ஆயிரத்து 400 ரூபாவும் இவ்வருடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(10-152)

# ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தையொட்டி மாணவர்களுக்கிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.28

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 125 ஆவது குருபூசைத் தினத்தையொட்டிப் பாடசாலை மாணவர்களுக்களுக்கிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளை இலங்கைச் சைவபரிபாலன சபை நடத்தவுள்ளது.

பேச்சுப் போட்டியில் தரம் 6,7,8 மாணவர்கள் கீழ்ப்பிரிவில் 'நாவலரைப் போல் நமக்காளில்லை' என்னும் தலைப்பில் 5 நிமிடம் பேசுதல் வேண்டும்.

தரம் 9, 10, 11 மாணவர்கள் மத்திய பிரிவில் "நாவலரும் தமிழகமும்" எனும் தலைப்பில் 7 நிமிடம் பேசுதல் வேண்டும்.

தரம் 12, 13 மாணவர்கள் மேற்பிரிவில் "நாவலர் நூலாசிரியர் பதிப்பாசிரியர்" எனும் தலைப்பில் 10 நிமிடம் பேசுதல் வேண்டும்.

கட்டுரைப் போட்டியில் தரம் 12, 13 மாணவர்கள் மட்டும் பங்குபற்றமுடியும். "நாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாறுடன் தொடர்புடைய தலைப்பு போட்டி நாளன்று வழங்கப்பட்டு கட்டுரை எழுதுவதற்கு ஒரு மணித்தியாலம் வழங்கப்படும்.

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அடுத்த மாதம் 14ஆம் திகதி பேச்சுப் போட்டியும் அடுத்தமாதம் 21ஆம் திகதி கட்டுரைப் போட்டியும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் 31ஆம் திகதியாகும்.

(10-13)

# கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் அடக்கம் செய்ய இடநெருக்கடி

குருநகர்,ஒக்.28

இறந்த கத்தோலிக்க மக்களின் சடலங்களை அடக்கம் செய்யப் பயன்படுத்தப்படும் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடநெருக்கடி உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பிரதேசத்தில் உள்ள கத்தோலிக்க மக்கள் தமது இறந்த உறவினர்களின் சடலங்களை இச்சேமக்காலையிலேயே அடக்கஞ்செய்து வருகிறார்கள். அடக்கம் செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் கற்களால் கல்லறை அமைத்துப் பேணிவருவது கத்தோலிக்க மக்களின் வழக்கமாகும்.

இங்கும் இந்த நடைமுறை பின்பற்றப்படுவதனால் மேற்படி நிலையைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே புதைத்த புதைகுழிகள் திறக்கப்பட்டு அப்புதைகுழிகளிலேயே மேலும் சடலங்கள் புதைக்கப்படுகின்றன.

யாழ். ஆயர் இல்லத்தினால் பரிபாலிக்கப்பட்டுவரும் இச்சேமக்காலையில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்குரிய ஆறடி நிலத்துக்கென உறுதிப்பத்திரமும் உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அப்புதைகுழியின் உரிமையாளர் இறந்த தமது உறவினர்களின் சடலங்களை உரிய புதைகுழியில் புதைப்பதற்கு வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளது. (10-51)

**நாளை**

ஐப்பசி 13
வெள்ளிக்கிழமை
(29.10.2004)
திதி: பிரதமை
முற்பகல் 9.38 வரை
நட்சத்திரம் : பரணி
பிற்பகல் 3.00 வரை
சுபநேரம்: 6.03 - 7.33
ராகுகாலம்: 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

## சாவகச்சேரி - தனங்களப்பு வீதியில்

# கடலேரியை அண்டிய பகுதியில் குப்பைகளைக் கொட்டப் படைத்தரப்பு அனுமதி

தென்மராட்சி,ஒக்.28

சாவகச்சேரி - தனங்களப்பு வீதியில் உள்ள கடலேரியை அண்டிய பகுதியில் சாவகச்சேரி நகரப் பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளைக் கொட்டுவதற்குப் படைத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த நான்கு வருடங்களாக இப்பகுதி அதிஉயர் பாதுகாப்பு வலயமாக அமைந்திருந்ததால் நகரசபையினால் சேகரிக்கப்பட்ட குப்பைகள் நகரின் வேறு இடங்களில் கொட்டப்பட்டு வந்தன.

குப்பைகளைக் கொட்டுவதற்கு, அந்தந்த இடங்களில் உள்ள பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து குப்பைகளைக் கொட்டுவதற்கு நகர சபையினர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இவ்விடயம் தொடர்பாகத் தென்மராட்சிப் பிரதேச சபைச் செயலாளர், நகர சபைச் செயலாளர் ஆகியோர் பலாலி படைத் தலைமையகம் உட்படப் பல உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டிருந்தனர்.

கடந்த வாரம் 521ஆவது படையணியின் சிவில் அதிகாரி, நகரசபைச் செயலாளருடன் சென்று குப்பை கொட்டும் இடங்களைப் பார்வையிட்டதை அடுத்து மேற்படி பகுதியில் குப்பை கொட்டுவதற்குப் படைத் தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

(10-117)

**உதயவாக்கு**

பெறுவதைவிடக் கொடுப்பதிலே கவனம் இருத்தல் நல்லது.

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வீடு விற்பனைக்கு

றெயில் றோட், கொக்குவில் கிழக்கில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக் குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 15, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(37984)

### தவறிவிட்டது

சித்தன்கேணி ஸ்ரீ நாககன்னி ஆலய பூச கரின் 077-6523372 இலக்க கையடக்கத் தொலைபேசி (NOKIA 3310) சங்கானைக் கும் சித்தன்கேணிக்கும் இடையில் தவறி விட்டது. அத்தொலைபேசியில் ஆலயத்தின் முக்கிய விடயங்கள் உள்ளதால் அதைக் கண டெடுத்தவர் ஆலயத்தில் ஒப்படைக்கவும். சன் மானம் வழங்கப்படும்.

(38013)

### வாடகைக்கு வீடுதேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் ஒருமாத காலம் தங்கி இருந்து போக, தள பாடங்களுடன் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு வீடு நல்ல சுற்றாடலில் உடனடியாகத் தேவை. தொடர்புகளுக்கு: 0777 283816.

(38018)

## பல்கலைக்கழகத்தில் நூல்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடத்தினால் நூல்கள், சஞ்சிகை களின் கண்காட்சி எதிர்வரும் டிசெம் பர் மாதம் நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சி தொடர்பாகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் விடுத்த செய் திக் குறிப்பு வருமாறு:

பல்கலைக்கழகத்தின் கற்றல், கற்பித்தல், ஆய்வுசெய்தல், அறி வைப் பரப்புதல் ஆகிய பணி களுக்கு அடிப்படை வாசிப்புக் கலா சாரத்தை மாணவர்கள் மத்தி யிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்துவதாகும்.

இந்நோக்கத்தை நிறைவுசெய் வதற்காகக் கலைப்பீடத்திலே ஆண்டுதோறும் டிசெம்பர் மாதம் முதலவாரம் உயர்கல்வி சார் நூல கள், சஞ்சிகைகளின் கண்காட்சி யும் விற்பனையும் இடம்பெறவுள் ளன.

இக்கண்காட்சியில் பல்கலைக் கழகக் கலைப்பீடம் வெளியிட்டு வரும் நூல்களும், சஞ்சிகைகளும, கலைப்பீட ஆசிரியர்களின் தனிப் பட்ட வெளியீடுகளும், உயர்கல்வி சார் ஏனைய வெளியீடுகளும் காட சிக்கு வைக்கப்படும். கண்காட்சி யின் போது கைவசம் அதிக பிரதி கள் உள்ள நூல்களும், சஞ்சிகை களும் விற்பனை செய்யப்படும்.

உயர்கல்வி நிறுவனங்கள், அறிவைத் தேடும் ஆசிரியர்கள், மாணவர்கள், அறிவைத் தேடும் பொதுமக்கள் இந்நூல்கள், சஞ் சிகைகளின் கண்காட்சிக்கு வருகை தந்து பயன்பெறமுடியும்.

காட்சிக்கு உட்படுத்தக் கூடிய உயர்கல்விசார் நூல்களை எழு திய ஆசிரியர்கள் அல்லது வெளி யீட்டாளர்கள் அவற்றைத் தந்து உதவும்படி வேண்டப்படுகின்றனர்.

கண்காட்சியில் இடம்பெறத் தக்க நூல்கள், சஞ்சிகைகளைக் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் நவம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்பதாக ஒப்படைக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது.

(ஐ)

## மாவீரர் தினத்தை ஒட்டி பற்றைகளைத் துப்புரவாக்கவும்

அரியாலை,ஒக்.28

மாவீரர் தினத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச வீதியோரங்க ளில் காணப்படும் பற்றைகளைத் துப்புரவு செயயுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் தமது வீடுகளுக்கு முன்பாக வீதியோரமாகக் காணப் படும் புற்கள் மற்றும் பற்றைகளை வெட்டித்துப்புரவு செய்யுமாறு கேட் கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சுற்றாடல் பகுதியில் உள்ள வெற்றுக் காணிகளில் படர்ந்து வளர்ந்திருக் கும் பற்றைகளைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள் ளது.

(10-17)

## 'மத்தியின் சொற்போர் களம்'

பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடத் தப்படும் 'மத்தியின் சொற்போர் களம்' விவா தச் சுற்றுப்போட்டி இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக நடை பெறும் அகில இலங்கைத் தமிழ்ப் பாடசாலை களுக்கிடையேயான இந்த விவாதச் சுற்றுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்த்துறையின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.அல்பிரட் டும், சிறப்பு விருந்தினராகக் கல்விக் கழகத் துணைப்பொறுப்பாளர் அருண் மற்றும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

போட்டியில் வெற்றியீட்டும் பாடசாலைகளுக்கு முதலாம் பரிசாகப் 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வெற்றி விருதும், இரண்டாம் பரிசாக 7 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வெற்றி விருதும், மூன்றாம் பரிசாக 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வெற்றி விருதும் மற்றும் சிறந்த வாதிக்கு 3 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வெற்றி விருதும் வழங்கப்படும்.

(ஐ-202)

## பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள முடியும்

குருநகர்,ஒக்.28

யாழ்.மத்திய கல் லூரியில் வார இறுதி நாள்களில் நடைபெற் றுவரும் இலங்கை நிர் வாக சேவைக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற் கான மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப் பரீட் சைக்கான பயிற்சி வகுப்புகளில் இலங்கை நிர்வாக சேவைப்பரீட் சைக்கு விண்ணப்பித்த சகலரும் கலந்துகொள்ள முடியும் என யாழ் கீழ ழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் கு.பற்குணராசா தெரி வித்தார். (10-51)

## செயலாளர்கள் கலந்துரையாடல

யாழ்ப்பாணம்,ஒக்28

யாழ். மாவட்ட நகர, பிரதேச சபைச் செயலாளர்களுக்கான விசேட கலந்துரையா டல் இன்று வியாழக் கிழமை காலை 10 மணிக்கு பிரதேச உள் ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவ லகத்தில் நடைபெற வுள்ளது.

(ஐ-202)

---

**யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**
**ஐயரத்தினம் நினைவுதினமும்**
**கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் - 2004**

தலைவர் : **திரு.பொ.சுந்தரலிங்கம்** அவர்கள் (அதிபர்)
இடம் : பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம் : 29.10.2004 வெள்ளிக்கிழமை மு.ப.9.00 மணி
பிரதம விருந்தினர் : **பேராசிரியர் இ.சிவகணேசன்** அவர்கள்
(மருத்துவபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)
நினைவுப்பேருரை : **திரு.வே.தனபாலசிங்கம்** அவர்கள்
(இளைப்பாறிய கனிஷ்ட பிரிவு அதிபர்)
சிறப்பு விருந்தினர் : **திரு.ச.கைலாசநாதன்** அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
கௌரவ விருந்தினர்: **கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்கள்
பரிசில் வழங்கல் : **திருமதி சாந்தினி சிவகணேசன்** அவர்கள்
நன்றியுரை : **திரு. வை.சிவராசா** அவர்கள்
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

**அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.**

**அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர்கள்.**

(38016)(42-14-44)

---

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 624 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|---|---|
| திகதி | 26-10-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4049040-4065559 |

வெற்றி இலக்கங்கள்
**20 23 25 31**

லக்கினம் விருச்சிகம்

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது
இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10.00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,64,589 | 10/- | 36,45,890/- |
| 2.இலக்கங்கள் | 33,554 | 20/- | 6,71,080/- |
| 1.இல + லக்கினம் | 33,307 | 30/- | 9,99,210/- |
| 2.இல + லக்கினம் | 3,002 | 100/- | 3,00,200/- |
| 3.இலக்கங்கள் | 893 | 500/- | 4,46,500/- |
| 3.இல + லக்கினம் | 90 | 5,000/- | 4,50,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 4,35,444 | - | 89,43,130/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 89,43,130/-

தொடர் இல. 5032211 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 29ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**4054954-9-36**
**4058509-2-27**
**4050008-5-47**
**4051881-6-60**
**4051188-9-18**

---

**வான்மதி சனசமூக நிலையம்,**
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

**அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு பிற்போடல்**

மேற்படி நிலையத்தால் இன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடி யாத காரணத்தால் 11.11.2004 அன்று பி.பகல் 4.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. - **நிர்வாகிகள்.**

(C/38504)(42-14-44)

---

**பாராட்டி வாழ்த்தி அக மகிழ்கின்றோம்**



மட்டுவில் தெற்கைச் சேர்ந்த
கிருஷ்ணன் - செல்வரதி தம்பதிகளின் புத்திரி

**செல்வி நிவேதிகா**

(வளர்மதி கல்வி நிலையம் - மட்டுவில்)

2004 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்து வதுடன், இவரது பெறுபேற்றுக்கு உறுதுணையாக இருந்த கல்விச் சமூகத்தினருக்கும் நன்றி தெரிவிப் பதுடன் இவர் மேலும் கல்விச் சிறப்புப்பெற வாழ்த்து கின்றோம்.

மருதன்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

வாழ்த்துவோர்:
ச.சின்னத்தம்பி குடும்பத்தினர்.
(பெரியப்பா).

(C/38505)(42-14-44)

---

**கண்ணீர்க் காணிக்கைகள்**



**நற்குணசேகரம் சிவபாதம**

(உபபொருளாளர், காரைநகர் சிவன்கோயில மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை, இளைப்பாறிய உதவி முகாமையாளர், மக்கள் வங்கி - யாழ்ப்பாணம்)

தோற்றம் 04-04-1937 மறைவு 24-10-2004

அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரு டைய ஆத்மா சாந்தியடைய தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கினறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை. காரைநகர்.

(38022)(42 14-44)

---

**இதய தீபம் மறைந்த**
**பதினான்காம் ஆண்டு நினைவலைகள்**

அன்னை மடியில் 15 – 04 – 1904



அரன் அடியில் 30 – 10 – 1990

அமரர் **வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை**

திதி: அபரபக்க பிரதமை

*கண்ணை இமை காப்பதுபோல் காலமெல்லாம் காப்பாற்றி*
*கணப்பொழுதில் மறைந்தீரே கலங்குகிறோம் அப்பாவே!*
*நிலையில்லாத வாழ்வையென்னி நித்தம் தவிக்கின்றோம்*
*நிறைமதிபோல் ஒளிவீசும் உன் வதனம் காண்பதெப்போ?*

உங்கள் நினைவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

(37960) (24-42-14-44)

---

**முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி**

அன்னையின் மடியில் 30 – 06 – 1975



ஆண்டவன் மடியில் 28 – 10 – 2003

**அமரர் சோதிலிங்கம் திருக்குமார் (திரு)**

(கல்வளை, சண்டிலிப்பாய்)

சோதிலிங்கத்தின் சொத்தாய் எம்மடியில் தலைவனாய்
தவப் புதல்வனாய் இந்தப் பூமிக்கு வந்துதித்தாய் - நீ
திருத்திய திருவதனத்துடன் திருக்குமார் எனும் நாமம் பெற்று
உன் குடும்பத்தை நிறைசோதியாய் வாழ வைப்பேன்
என்றெண்ணி புகுந்தாய் லண்டன்
பாசத்துடன் வளர்த்தவர்கள் பாரினிலே பரிதவிக்க பாதியிலே
பறித்த செய்தி கேட்டு ஓராண்டு காலமானதடா!
உன் பிரிவால் நாம் படும் துன்பம் போதுமடா!

தகவல்: சிறியதந்தை.
வல்லை வீதி,
சங்கானை.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள்.

(38015)(42-14-44)

யாழ்ப்பாணம்
குடுத்துவி இசை

# நாதஸ்வரக் கருவியை உருவாக்குவதில் தனித்துவம் மிக்க ஈழத்துக் கலைஞர்!

சிங்கார வேலனே தேவா....
"நாதஸ்வர ஓசையிலே....."
"நலந்தானா.... நலம் தானா"
இவை சினிமாத் திரைப்படப் பழைய பாடல்களாயிருந்தாலும் இன்றும் எம் மனதில் நீங்கா நினைவில் இருக்கின்றன. ஏன்? பாட்டை விட இவற்றிற்கான இசை ஓர் இரசிப்புத் தன்மையை எம் மனதில் ஏற்படுத்துவதை உணர்கின்றோம். சாதாரண சங்கீதக் கருவிகளிலே எழும் இசையை விட நாதஸ்வர இசையிலே இப்பாட்டு மெட்டுக்கள் அமைந்து இன்றும் நிலைத்து நிற்கின்றன.

நம் நாட்டில் எத்தனையோ துறைகளில் எத்தனையோ கலைஞர்கள் புகழ்பெற்று விளங்குகின்றார்கள். இந்த வரிசையில் அராலியூர் சி.அமரசிங்கம் அவர்களும் தமது தொழிலிலே மிகப்பிரபல்யமான ஒருவராவார். ஈழநாட்டிலே முதன்முதலில் நாதஸ்வரக் கருவியை

தொழிற்பேட்டையில் ஏனைய தொழிலாளர்களுடன்



உருவாக்கி இன்றுவரையும் இதனை உருவாககும் 'தனி ஒரு மனிதனாக' விளங்கி வருகின்றார்.

ஆலயத் திருவிழாக்கள் திருமண நிகழ்வுகள் மற்றும் எந்தவொரு மங்களகரமான நிகழ்வுகளிலும் நாதஸ்வரக் கச்சேரி என்பது இன்றியமையாத ஒன்றாக எம் மக்கள் மத்தியில் விளங்கிவருகின்றது.

நாதஸ்வரத்தில் பிறக்கும் இசையை ரசிப்பதற்கும் அதனைக் கேட்பதற்கும் என்றே ரசிகா கூட்டம் ஆவலுடன் காத்திருக்கும் இந்த இசையை-நாதஸ்வரத்தை உருவாக்குவது யார்? எப்படி உருவாக்குகின்றார்கள்? என்பதை எல்லோரும்



அறிந்துகொள்வதற்கு ஒருவாய்ப்பாக அமரசிங்கம் ஆச்சாரியாருடன் ஒரு சில நிமிடங்கள் உரையாடியபோது....

*கேள்வி:* மரத்தினாலே எத்தனையோ விதமான கலைப் பொருள்களை உருவமைப்பு செய்கிறார்கள். நீங்கள் மட்டும் நாதஸ்வரக் கருவியை தேர்ந்தெடுத்தது ஏன்?

*பதில்:* 1968 ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் இந்தியாவிலே இருந்துதான் இந்நாட்டுக் கலைஞர்களுக்கான நாதஸ்வரக் கருவிகள் தருவிககப்பட்டன. இதில் பல சிரமங்களையும் வீண் பண விரயங்களையும் இவர்கள் எதிர்நோக்கினர். இந்நிலையில் காலஞ்சென்ற எனது நண்பன் கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் வீஏபாலகிருஸ்ணன் அவர்களின் வேண்டுகோளும இக்கருவியின் தொழில்நுட்பத்திறனும் இதனை உருவாக்குவதற்கான எண்ணத்தை என் மனதில் தூண்டியது.

*கேள்வி:* இத்துறையில் ஈடுபட்டு எத்தனை வருடங்களாகின்றன?

*பதில்:* சுமார் 35 வருடங்களுக்கு மேலாக இன்றுவரை இதனை உருவாக்கி வருகின்றேன்.

*கேள்வி:* காலஞ்சென்ற வீ.ஏ.பாலகிருஸ்ணனை விட ஏனைய நாதஸ்வர வித்துவான்களுடன் தங்களுக்கு உள்ள தொடர்புகள்... அறிமுகங்கள் பற்றி...

*பதில்:* காலஞ்சென்ற என்.கே.பத்மநாதன் எமது அருமை நண்பர். என்னைத் தேடி அடிக்கடி வீட்டிற்கு வரும் நாதஸ்வர வித்துவான்களில் இவரும் ஒருவர். என்னைவிட நாதஸ்வரக் கருவியின் தொழில்நுட்பங்களை கூடுதலாக அறிந்தவரும், அனுபவமும் உள்ளவராக அவர் இருந்ததால், இக்கருவி பற்றிய தொழில நுட்ப ஆலோசனைகளையும் அவரிடம் இருந்து நான் பெற்றுக்கொள்ள பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

**செவ்வி:**
**மு.சந்திரகுமார்**

இவரைப் போலவே, கே.ஆர்.சுந்தரமூர்த்தி, வீ.கே.கானமூர்த்தி, வீ.கே.பஞ்சமூர்த்தி சகோதரர்கள், எஸ்.எஸ்.சிதம்பரநாதன் மற்றும் பி.நாகேந்திரம் போன்றோரும் எனது இனிய நண்பர்கள்.

இவர்களுக்கான நாதஸ்வரக் கருவிகளை கடந்த பல வருடங்களுக்கு மேலாக நானே உருவாக்கிக் கொடுத்தது பெரும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

*கேள்வி:* உள்நாட்டுக் கலைஞர்களைவிட வெளிநாட்டு நாதஸ்வரக் கலைஞர்களும் உங்களது நாதஸ்வரக்கருவிகளைப் பாவிக்கின்றார்களா?

*பதில்:* குறிப்பாக இந்தியா உட்பட, கனடா, மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிற்ஸர்லாந்து நாடுகளில் வாழும் நாதஸ்வரக் கலைஞர்களும் என்னால் உருவாக்கப்பட்ட இக்கருவிகளை விருப்பத்துடன்பெற்று இசைமழை பொழிந்து வருகின்றார்கள்.

*கேள்வி:* இதனைச் செய்வதற்கு அதற்கான மரங்களை எப்படித் தேர்ந்தெடுக்கின்றீர்கள்? அவற்றை எங்கிருந்து பெறுகின்றீர்கள்?

*பதில்:* இக்கருவியின் மேல்பாகம் 'உழவு' என்றும், கீழ்ப்பாகம் 'அனசு' என்றும், இன்னொன்று 'நறுக்கு' என்றழைக்கப்படும் 'சீவாளி பகுதியுமாகும். இதில் 'உழவு' என்னும் பகுதியைச் செய்ய 'அச்சா' என்னும் மரம் தேவைப்படுகின்றது.




'அனசு'ப் பகுதியை உருவாக்க கருவை, கூல்வாகை, கருமருது போன்ற மரங்கள் தேவைப்படுகின்றன. இவற்றை இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் எதுவித சிரமமுமின்றிப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. ஆனால், 'சீவாளி' என்ற பகுதிக்குத் தேவையான மரம் மட்டும் இந்தியாவில் இருந்து இங்கு தருவிக்கப்படுகிறது.

*கேள்வி:* எல்லா நாதஸ்வரங்களும் ஒரே மாதிரியானவையா? அவற்றிலும் ஏதாவது வித்தியாசமான வகைகள் உண்டா?

*பதில்:* நாத்ஸ்வரத்திலே 'பாரி', 'திமிரி' என இருவகை உண்டு. அநேகமாக 'பாரி' என்ற வகையே நெடுங்கால்மாகப் பாவனையில் இருந்துவருகிறது. இது 2 கட்டை சுருதியில் உருவாக்கப்படுவது. இதன் உழவு 29 அங்குலஅளவுடையது.

அனசுப் பகுதி 7 அங்குல நீளமும், 6½ அங்குல விட்டமும் உடையது. 2 கட்டை சுருதி கொண்ட இக்கருவி முதன்முதலில் இந்தியாவின் நரசிங்கன் பேட்டையைச் சேர்ந்த என்.இரங்கநாதன் என்ற ஆச்சாரியாரினால் உருவமைப்புச் செய்யப்பட்டது. 2 கட்டை சுருதியைக் கொண்ட இந்த நாதஸ்வரத்தில் இசையை வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். இந்த இசையைக் கேட்பதற்கும் ரசிப்பதற்கும் இனிமை மிகுந்ததாகவும் இருக்கும். இக்கார




ணங்களினால், அன்றைய நாதஸ்வரக் கலைஞாகள் உட்பட பலர் இன்றுவரை இதனைப் பாவனைசெய்து வருகின்றார்கள்.

*கேள்வி:* தனியொரு மனிதனாக இத்துறையிலே தொழில்திறமை பெற்ற நீங்கள் பெற்றுக்கொண்ட பட்டங்கள், விருதுகள் பற்றி....?

*பதில்:* தனியொரு மனிதன் என்று நான் குறிப்பிடுவது, இலங்கையிலே நாதஸ்வரக் கருவியை என்னைத்தவிர வேறு எவரும் உருவாக்கவில்லை என்பதால்தான் எனது குலத் தொழிலைச் செய்வதற்கு நன்கு அனுபவமிகக, தொழில்திறன்மிக்க, தொழிலாளர்களை வேலைககமர்த்தியுள்ளேன். இவர்களின் ஆற்றலும் ஊக்கமும் என்னை இத்துறையிலே மேலும் வளர்ச்சியடையச் செய்துவருகின்றது. இவற்றைவிட ஆலயங்களுக்கான தேர் மற்றும் சிற்பவேலைகளையும் செய்து வருகின்றேன்.

02.04.1978 இல் சங்கரத்தை பத்திரகாளி அம்மன் கோவில் நிர்வாகத்தால் 'சிற்பகலாநிதி' எனவும், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய நிர்வாகத்தால் 'சிற்பகலாரத்தினம்' எனவும், உடுவில் கற்பக விநாயகர் தேவஸ்தானத்தினரால் 'திட்பநுட்பசிற்பக் கலாமணி' எனவும், நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தினரால் 'சிற்பகலாவிநோதன்' எனவும், வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினால் 'நாதஸ்வர சிற்ப வித்தகர்' எனவும் 18.02.2000 இல் இலங்கை நாதஸ்வரக் கலைஞர்களால் 'ரதாதி நாதஸ்வர சிற்ப கல்பக' எனவும் பல பட்டங்களும், விருதுகளும் பெற்றுள்ளேன். இவற்றைவிட மேலும் பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளேன். (இவற்றை நேரில் காட்டுகிறார்).

*கேள்வி:* இதுபற்றி வேறு விடயங்கள்...

*பதில்:* எனக்குப் பின்வரும் சந்ததிகளும் இந்நாட்டிலேயே இக்கருவியை உருவாக்க முன்வரவேண்டும். இத்தொழிலிலே பிரபல்யமடையவேண்டும் என்பது என்னுடைய அவா. ★

# தமிழிசையைக் கற்றுக்கொள்வதில் வெளிநாட்டிலுள்ளோர் தீவிர ஆர்வம்!

கடந்த 40 வருடங்களாக இசைத்துறையில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றுத் திகழ்பவர் சங்கீத பூஷணம் திருமதி குணபூஷணம் நாகராசா.

தற்போது நோர்வேயில் வசித்து வரும் இவர், அங்கு இக்கலையைப் பலருக்கும் போதித்து வருகிறார். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்து இசைக் கச்சேரி ஒன்றை நடத்திய அவரை 'கலைச்சுடருக்காகச் சந்தித்தோம்.. அந்தச் செவ்வியின் விவரம் கீழே:

*கேள்வி:* உங்களைப் பற்றி முதலில் கூறுங்கள்...?

*பதில்:* சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் எனது கல்வியினைப் பெற்றுக் கொண்டிருந்த நான் 1960 ஆம் ஆண்டு அண்ணாமலை இசைத தமிழ் மன்றத்திலேயே எனது கலையினைக் கற்க ஆரம்பித்தேன்.

அங்கேயே ஆசிரியர் தராதரம் வரை முடித்துக் கொண்டு 1964ஆம்ஆண்டு முதன் முதலில் நல்லூர், கந்தனின் புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்டத்திலன்று ஆலயச் சூழலில் பாடினேன். இதனையடுத்து ஒவ்வொரு வருடமும் திருவிழாவில் மணிமண்டபத்தில் பாடி வருகின்றேன்.

எனது குரல்வளம் நன்றாக இருந்தமையினால் எல்லோருமே என்னை இந்தியா போய்ப் படித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று கூறினார்கள். இதனால், நான் தமிழ்நாட்டிலுள்ள அடையாறுக்குச் சென்று அங்கே அரச கர்நாடக சங்கீதக் கல்லூரியிலும், மகாரதபுரம் சந்தானத்திடம் தனிப்பட்ட முறையிலும் எனது இந்த இசைக்கல்வியினைப் பெற்றுக் கொண்டேன். இங்கிருந்து இந்தியா போகும் போது ஒரு வானொலிக் கலைஞராகவும் கூட இருந்தேன். தற்போதும் வானொலிகளில் பாடி வருகின்றேன்.

நான் பொதுவாக எல்லா மண்டபங்களிலும் இசைநிகழ்வுகளிலும் பாடியுள்ளேன். இந்நிலையில் இருக்கும்போதுதான் நான் திருமண வாழ்வுக்காக 1976 ஆம் ஆண்டு நோர்வே சென்றேன்.

கேள்வி: இந்த இசை உலகிலே உங்களை வாழ வைத்தவர்கள் பற்றிக் கூறுவீர்களா....?

பதில்: எனது பெற்றோரிடம் ஓரளவு குரல் வளம் இருந்தது. அதுதான் ஆரம்பத்தில் என்னை இசைக்குள் செல்ல வழிவகுத்தது.

ஆரம்பத்திலே அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தைச் சேர்ந்த குருமார்கள், பத்மலிங்கம் ஆசிரியர், பாலசிங்கம் ஆசிரியர், நமசிவாயம் ஆசிரியர், புஷ்பரட்ணம் ஆசிரியர், பரமசிவம் ஆசிரியர் மற்றும் தர்மபுரம் ஆதீன வித்துவான் பண்ணிசைப் புலவர் ராஜசேகரத்திடமும் முறைப்படி கற்றுக்கொண்டேன்.

பண்ணிசையை முறையாகக் கற்றமையினால் பண்ணிசைக் கலாமணி என்ற பட்டமும் எனக்கு கிடைத்தது.

*கேள்வி:* நோர்வேக்குள் நீங்கள் பிரவேசித்ததும் உங்களின் கலைஉலகவாழ்வு எவ்வாறிருந்தது?

*பதில்:* நோர்வேயில் ஒஸ்லோ நகரத்திலேயே நான் இருக்கின்றேன். ஆரம்பத்தில் அங்கே தமிழ்க்குடும்பங்கள் என்று ஒரு சில தான் இருந்தன. அந்த நேரத்தில் எனக்கு இந்தக் கலையை வெளிப்படுத்த முடியவில்லை. அப்போது மிகவும் சரியான கவலையாக இருந்தது.

இதன்பின்னர் 1980 ஆம் ஆண்டு நடந்த கலவரங்களின்போது எங்கள் தமிழ்மக்கள் அங்கே வந்தார்கள்.

அங்கு அவர்கள் வரும்போது சின்னக் குழந்தைகளுடனேயே வந்தனர். எனவே, அவர்களுக்கு கற்பிக்கவேண்டும் என்று அங்கே உள்ள அன்னைபூபதி மையத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினேன்.

ஓய்வு நேரங்களில் வீட்டிலும் பிள்ளைகளை அழைத்துச் சொல்லிக்கொடுப்பேன்.

ஆரம்பத்தில் அங்கே நிகழ்வுகள் மிகவும் குறைவு,தற்போது அந்த நிலைமை மாறிவிட்டது. இப்போது அதிகமாக எமது தமிழ்மக்கள் காணப்படுகின்றனர் பல அரங்குகளுக்கு சென்று பாடியுள்ளேன்.

நான் நோர்வேயில் மட்டுமல்ல லண்டன், ஜேர்மனி, சுவிஸ் போன்ற எல்லா நாடுகளுக்கும் சென்று பாடியுள்ளேன்.

**செவ்வி: கங்கா, சாம்பவி**

*கேள்வி:* இந்தக் கலையினைப் பெற்றுக் கொள்வதற்கு அங்கே உள்ள பெற்றோர், பிள்ளைகளின் ஆர்வம் எப்படியுள்ளது...?

*பதில்:* நிறைய ஆர்வம் உள்ளது. இங்கே உள்ளவர்களினை விட அங்கே அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். பிளளைகளை விட அங்கேயுள்ள பெற்றோர் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

இந்தக் கலைமூலம்தான் கலாசாரத்தையும் மற்றும் நடை, உடை, பண்புகளினைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம் என அவர்கள் நினைத்துள்ளனர்.

எமது கலாசாரத்தினை அவர்களுக்கு விளஙகவைப்பது கலையும், ஆலயமும் தான். அதனால்தான் அவர்களுக்கு இதனை கற்பிக்க வேண்டும் எனப் பெற்றோர் விரும்புகின்றனர்.

*கேள்வி:* உங்களிடம் படித்த மாணவர்கள் தற்போது என்ன நிலையில் உள்ளனர்....?

*பதில்:* என்னிடம் படித்த மாணவர்கள் நல்ல நிலைக்கு வந்துள்ளனர். அவர்கள் தாமாகவே இசைத்தட்டு வெளியிடக்கூடிய அளவிற்கு வளர்ந்துவிட்டனர்.

அந்தவகையிலே தற்போது மெல்லிசைப் பாடல்கள்தான் அதிகம் வெளியிடுகின்றனர். தனியாக சங்கீதம் என்று ராகம், சுரம் என பாடினால் எவருமே அதனை விரும்பமாட்டார்கள். அவர்கள் இனிவருங்காலங்களிலே தனிப் பாடல்களினை சி.டி.களாக வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

*கேள்வி:* இங்கு இந்த இசையினைக் கற்பவர்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்...?

*பதில்:* கலை நன்றாக வளர்ந்துள்ளது. இங்கே உள்ள பிள்ளைகளைப் பார்க்கின்ற



போது அவர்கள் நன்றாக பாடுகின்றார்கள். அவர்களின் ஆர்வம் மாறவில்லை. எந்தக் காலத்திலும் மாறாது என்றுதான் நினைக்கின்றேன்.

இந்தக் கலைக்குரிய மரியாதையினைக் கொடுத்து இன்னும் வளர்க்கவேண்டும் நோர்வே நாட்டுப்பிள்ளைகள் இங்கே வந்து பார்த்துவிட்டு யாழ்ப்பாணத்தில் கலை நன்றாக இருக்கிறது என்று கூறுவார்கள்.

எனவே, இதனை இப்படியே வளர்த்தெடுக்க வேண்டும் என்பதே எனது ஆசை.

*கேள்வி:* கர்நாடக இசைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது....?

*பதில்:* இதற்கு நல்லவரவேற்பு உண்டு. அத்துடன் வாய்ப்பும் உண்டு. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு நிறைய சாதகம் பண்ணவேண்டும். பயிற்சி எடுக்காமல் இந்தக் கலையை வளர்க்கமுடியாது.

அங்கே உள்ளவர்களுக்கு வயலின், நடனம், வீணை போன்றவற்றிலேயும் அதிக ஆர்வம் உள்ளது.

*கேள்வி:* உங்களின் எதிர்பார்ப்பு, நோக்கம் பற்றிக் கூறுவீர்களா...?

*பதில்:* எதிர்காலத்தில் அடுத்து ஓர் சந்ததியினை உருவாக்குவதே எனது இலக்கு. என்னிடம் கற்கும் பிள்ளைகள் நல்ல நிலைககு வரவேண்டும் என்பதே எனது நோக்கம். ★

கருத்தரங்கு III

# அரசியலில் பெண்கள்

நாள் : 30.10.2004
நேரம் : 9.30 - 12.00

கருத்துரை வழங்குபவர்:
பேராசிரியர் திரு.A.V.மணிவாசகர்
(அரசறிவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

பெண்கள் அபிவிருத்தித் திட்டம்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி-38876) (24-14-19)

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் நூலக வாரத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா புத்தகசாலையின் அனுசரணையுடன் 28.10.2004, 29.10.2004 வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் நூல் கண்காட்சியும் விற்பனையும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறும் என்பதனை மாணவர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
(ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட நூல் நிலையங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்).

*ஸ்ரீலங்கா புத்தகசாலை,*
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி-38896)(32-14-19-24) T.P. : 222 2573

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ. சைவ பரிபாலனசபை நடத்தும் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபைத்தலைவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செட்டித்தெரு ம.மி.த.க.பாடசாலை அதிபர் வி.ந.சிறிதரன் கலந்துகொள்வார். (ஐ-202)

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம் பதவி வெற்றிடம்

(1) மனேஜர்
(2) உதவி மனேஜர்
(3) காசாளர் (ரிக்கட் விற்பனையாளர்)
(4) ஒப்பரேட்டர்
(5) ஒப்பரேட்டர் பயிலுநர்
(6) எழுதுவினைஞர்
(7) தொழிலாளர்

விண்ணப்பங்கள் யாவும் 30.10.2004இற்கு முன் தபால் மூலம் 'நாதன்ஸ் சினிமா (பழைய சாந்தித் தியேட்டர்) யாழ்ப்பாணம' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**நாதன்ஸ் சினிமா** (பழைய சாந்தித் திரையரங்கு)
11, இராமையாச் செட்டியார் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி-33501) (24-14-19)

## வெல்டிங் பிளாண்ட்



ஜெனரல் இக்வீப்மன்ட்ஸ் லிமிடட்
316, 400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799 பக்ஸ்: 2434637

செல்வி பிரவீனா



மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

சுவிற்ஸர்லாந்தில் வசிக்கின்ற
திரு.திருமதி செல்வகாந்தன் - பத்மலோஜனி தம்பதிகளின்
செல்வப் புதல்வி

## செல்வி பிரவீனா

தனது மூன்றாவது பிறந்த நாளை இன்று (28.10.2004) வியாழக்கிழமை சுவிஸில் தன்னுடைய அப்பா, அம்மா ஆகியோருடன் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி பிரவீனாவை அப்பா, அம்மா, புன்னாலைக்கட்டுவன் அப்பப்பா, அப்பம்மா, சுவிஸ் தாத்தா, அம்மம்மா, கனடா ரவி மாமா, நந்தினி மாமி, மச்சான்மார்களான தர்சன், கோபி, சுவிஸ் சிறீ மாமா, தர்சினி மாமி, சுவீடன் ராஜன் சித்தப்பா, கிருபா சித்தி, சுவிஸ் சதீஸ் மாமா, ரஜனி மாமி, கிவிஷன் மச்சான், பவித்திரன் மச்சான மற்றும் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பூட்டிமார், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் சீருஞ் சிறப்புமாகச் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றார்கள்.

*பலாலி வீதி,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*புன்னாலைக்கட்டுவன்.*

திரு.திருமதி க.சிறீஸ்கந்தராசா
அப்பப்பா.
(37776) (24-14-19)

## டாரி எயர் கொம்பிரசர்

DARI AIR COMPRESSORS

விற்பனைக்குப் பின் உயர்தர சேவை (After-sales service) வழங்கப்படும்.

டிரெக்ட் கப்பல் மற்றும் பெல்ட் டிரிவன்.

உள்ளடக்கம்
24 முதல் 240 லீற்றர்



ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹாா்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5 நேரடி : 2337286
பெக்ஸ்: 2446554

நாடெங்குமுள்ள விநியோகஸ்தர்களிடம் கிடைக்கின்றன

## 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

28-10-2004





அல்வாய் தெற்கு, அல்வாயைச் சேர்ந்த
சிவகீதன் - வினோபா
தம்பதிகளின்
செல்வப்புதல்வி செல்வி கௌசிகா

இன்று (28.10.2004) வியாழக்கிழமை தனது இரண்டாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி கௌசிகாவை அம்மப்பா, அம்மம்மா, பெரியன்ரி, சித்தி, மாமா, டோகாவிலிருக்கும் மாமன்மார் மற்றும் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா ஆகியோர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ எல்லாம்வல்ல சந்நிதிமுருகனை வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

- தர்மராஜா குடும்பத்தினர்.

## 'அறிவியற்கதிர்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் விஞ்ஞான மன்றத்தின் வெளியீடான 'அறிவியற்கதிர்' நூல்வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 12.30 மணிக்குக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞான மாணவமன்றத் தலைவர் செல்வன் யதுரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவில் யாழ். வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் முதன்மை விருந்தினராகவும், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் அ.சோமஸ்கந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆசியுரையினைக் கல்லூரியின் அதிபர் வி.மாணிக்கம் வழங்குவார். நூலின் முதல் பிரதியை ஓய்வுபெற்ற பிரதி அதிபர் திருமதி தேவகி துரைராஜா பெற்றுக்கொள்வார்.

நூலின் ஆய்வுரையினைப் பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க.வித்தியாலய விஞ்ஞான ஆசிரியர் பூ.தியாகலிங்கம் நிகழ்த்துவார். (ஐ-13)

## பாராட்டி மனதார வாழ்த்துகிறோம்



*வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் உள்ளூராட்சி உதவியாளராகப் பணிபுரியும்*

நவாலியூர் **திரு.செல்வராசா ரமேஸ்** (L.G.A.)

தமிழ்நாடு காமரா ர் பல்கலைக்கழகத்தின் பொருளியல் M.A. (Econ.) Hons சிறப்புப் பட்டம் பெற்றதையிட்டு மிக்க மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பொருளியல் கலைமாணி சிறப்பு B.A. (Econ.)Hons பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் P.G.Diploma in Education (Ousl) Diploma in Manage ent (Ousl) ஆகிய பட்டங்களையும், யாழ். பல்கலைக்கழகத்தில் பொதுநிர்வாகத்தில் P.G.Diploma in Public (Adm) பட்டப்பின் Diploma பட்டத்தையும் பெற்றுள்ள இவர், ஒருசமாதான நீதவானும் ஆவார்.

"கருவில் இருந்து கல்லறை வரை
மக்கள் சேவை மகேசன் சேவை என"

பிரதேச வளர்ச்சியில் முன்னின்று செயற்படுபவரும் செயல்வீரருமான செல்வராசா ரமேஸ் பத்திரிகைத்துறையில் ஆர்வமாகத் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருபவருமாவார். யாழ். பல்கலைக்கழகத்தில் முன்னாள் உடற்கல்வித்துறை விளையாட்டு உளவியல் விரிவுரையாளராகக் கடமையாற்றிய செ.ரமேஸ், யாழ். பிராந்திய இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். இவற்றுடன் நவாலி HSCMF நிறுவனத்தின் தலைவராகவும் இருந்துவரும் இவர், மேலும் பல பட்டங்களைப் பெற்றுச் சேவையாற்ற வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபை.
மானிப்பாய்.

செயலாளர், உத்தியோகத்தர், ஊழியர்கள்,
வலி.தென்மேற்குப் பிரதேச சபை,
ஊழியர் நலன் புரிச்சங்கம்.

(C/38900)(42-14-19-24)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து





*அருட்செல்வம் — தயாளினி* தம்பதிகளின் செல்வப்புத்திரி ஜக்ஷனா தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (28.10.2004) வியாழக்கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, தாத்தா, பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், பூட்டி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் மட்டுவில் வேரக் கேணி கந்தசுவாமி அருளுடன் சகல பாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

*தகவல்: த.சந்திரபாலன்*
*(லண்டன்).*

C/38893



யாழ். பல்கலைக்கழக
விஞ்ஞான பீடம்
30 ஆம் ஆண்டு நிறைவு

மாபெரும்



விஞ்ஞானக் கண்காட்சி

செவ்வாய்
(26.10.2004)
முதல்
சனி
(30.10.2004)
வரை

ஊடக அனுசரணை
உதயன்



அனுசரணை
SAAMSTECH

# அன்பு நிறை உறவுகளே



## மகிழ்ச்சியின் ஆணிவேர்

**நம்** குடும்பத்தினருக்கும், நமக்குமான உறவுகளே நம்வாழ்வின் சந்தோசத்திற்கு ஆணிவேராகின்றன.

நாம் ஒவ்வொருவருமே நம்மைக் கேட்டுக் கொள்ளவேண்டிய கேள்விகள் பல உண்டு. என்னை நானே மதிக்கின்றேனா? என்னை எனக்கே பிடித்திருக்கின்றதா? எனக்கும் என் உறவுகளுக்குமிடையில் ஆழமான புரிந்துணர்வுகள் உண்டா? நான் மகிழ்வோடு இருக்கின்றேனா? இவை நம்மை நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள்.

பெண்களின் பெருமையும், தனித்துவமும் அவர்களுக்குள்ள பாசத்தினதும் அதை வெளிப்படுத்துவதிலும் தான் உள்ளது.

இதை நாம் புரிந்து, தெளிந்து வாழும்போது நம்மை விட மகிழ்ச்சியாக வாழ்பவர்கள் எவருமில்லை என்று நாம் கூறிப் பெருமைப் பட்டுக்கொள்ளலாம்.

உறவுகள் பலவகைப்படலாம். இந்த உறவுகளில் முக்கியமானது கணவன் - மனைவி உறவு. இந்த உறவு ஒரு கவிதையாக, காவியமாக 'பயில்தொறுல் நூல் நயம்போல்' இருக்க வேண்டும். இந்த உறவில் தான் பல பருவங்களில் பல வடிவங்களில் அன்பை வெளிப் படுத்தமுடியும்.

நாம் ஒரு குழந்தையாக, பெற்றோராக, ஆலோசகனாக, நண்பனாக, பரோபகாரியாக பல ரூபங்களை எடுக்கின்றோம். நாம் எடுக்கும் ஒவ்வொரு ரூபங்களும் சக உறவுக்கு நம் அன்பை வெளிப்படுத்துவதாக மட்டுமே அமைய வேண்டும்.

ஊடல், சச்சரவு, தாபம், போன்றவை இடம் பெறாத வாழ்வுகளே அதாவது தாம்பத்திய உறவுகளே இல்லை என்று சொல்லலாம்.

ஒவ்வொருவரும் ஏதாவது மனஸ்தாபம் ஏற்படும்போது 'இவை எனக்கு மட்டுமே ஏற்படுகின்றன', 'நான் மட்டும் ஏன் இந்தச் சோகத்தை அனுபவிக்கவேண்டுமென்று' அங்கலாய்க்கின்றோம்.




ஆனால், நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் நம்மை விடத் துன்பப்படுபவர்கள் ஏராளம் என்பதை உணர்வோம்.

அன்பு, தியாகம், மன்னிக்கும் மனோபாவம், விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மை என்பவையே ஒரு குடும்பத்தை அதன் அன்புப் பிணைப்பில் இன்னும் இறுக்கமடையச்செய்யும்.

இந்தக் குணங்கள் இருபக்க சமநிறையில் இருக்கும்போதே குடும்பம் என்பதை ஒரு கோயிலாக நம்மால் கண்கூடாகப் பார்க்கமுடியும்.

நமது திறமைகள் மழுங்கடிக்கப்படும் போதே நமக்குக் கட்டுக்கடங்காத கோபமும், வேதனையும் ஏற்படும். இதற்கு ஒரே தீர்வாக நம் துணையின் திறமைகளை மதிக்கவும், விட்டுக்கொடுக்கவும் நாம் பழகிக் கொண்டால் நமது திறமைகளை அவராகவே வெளிப் படுத்த முனைவார்.

எனவே, பெண்களே! நமது முன்னேற்றம் நமக்கு உயர்வு தரக்கூடியதாகத்தான் இருக்க வேண்டும்.

**- தீபா -**

'நான் முன்னேறி விட்டேன்'

'பெண் அடக்குமுறைக்கு எதிராக நான் சீறி எழுகின்றேன்' என்று கூறிக்கொண்டு நமது நற்குணங்களை நாமே தொலைத்துவிட்டு நிற்கக் கூடாது.

அந்தக் குணங்களாலேயே பெண்மையைப் போற்றிப் புகழவும், மதிக்கவும் செய்கிறார்கள். நம்பெண்மையின் மதிப்பை நாம் பாதுகாக்க வேண்டும். குடும்பத்து உறவுகளை நாம் மதித்துப்போற்றி வாழவேண்டும்.

குடும்ப உறவே நம்மைச் சமூகத்திடையே சிறந்தவர்களாக வாழ வழிகோலுகின்றது. எனவே, கணவன் - மனைவிக்கிடையில் புரிந்துணர்வுடன் வாழ்ந்து எம்வாழ்வை மேன்மைப் படுத்துவோம். ★

## சாதனைப் பூக்களுக்காய்...

சாதனைக் கனவுகளை
சாக்கடைக்குள் சங்கமித்து
சாதாரணமாய் ஏனோ
சக்தி இழந்தவளாய் நீ!

சீ! தனத்தை குறிபார்த்த
சிறுமைத் தோட்டாக்கள்
சீரிய நின் இதயத்தை
சிதைத்துக் கிழித்ததுவோ?...

'மெட்டி ஒலி', 'மனைவி'யுடன்
முட்டாள் பெட்டியொடு
நின் நிலைதனைமறந்து
'நீ, நான், அவள்' ஆகி
விட்டனையோ?...

மமதை ஆதிக்கம் முன்
மண்டியிட்டு நசுங்கிடவும்
மாயக்கனவுலகில் மயங்கி
மிதந்திடவும் அல்லவே உன் பறப்பு!

ஆழ்மனத்தின் ஓரத்திலே
அப்பாவியாய் விழிபிதுங்கும்
இலட்சியக் கனவதனை
இதமாக வருடிவிடு!

தியாகத்தில் நீராடி
திடம் கொண்டு வீரத்தால்
தமிழ் மூச்சாய் ஒரு தேசம்
தலை தாழ்த்தி உன் சாதனைப்
பூக்களுக்காய்....

- கு.சயந்தி -

## சந்தியாவின் கடிதங்கள்



*பிரியமுள்ள பிரியாவிற்கு,*

இன்று அதிக வேலைப்பளுவாக இருந்தாலும் என் கடிதத்திற்காய் நீ காத்திருப்பாய் என்பதால் எழுதுகின்றேன்.

இன்று 'தன்னம்பிக்கை' பற்றி சிறிது கூறலாம் என்று நினைக்கின்றேன்.

பெண்களாகிய எமக்கு அவசியம் இருக்கவேண்டியது இந்த தன்னம்பிக்கை.

தன்னை மதிப்பவர்களை. கம்பீரமானவர்களை. தைரியத்தின் வெளிப்பாடுகளை. உற்சாகத்தின் உருவங்களை நாம் வாழ்வின் எல்லாத்துறைகளிலும் காணலாம். உதாரணமாக அன்னை தெரேசா. ஹெலன் கெல்லர். இந்திராகாந்தி. கல்பனாராய் போன்றோரைக் குறிப்பிடலாம்.

இவர்களைப் பற்றி நினைக்கும்போது 'இவர்களல்லவா மனிதர்கள்' என்று பாராட்டுகின்றோம். கல்பனாவை நினைக்கும்போது 'என்ன துணிச்சல். எப்படி இவளால் இவ்வளவு துணிச்சலுடன் செயற்படமுடிந்தது' என்று அதிசயப் படுகின்றோம்.

இவர்களின் விடாமுயற்சிக்கும். வெற்றிக்கும் மூலகாரணமே தன்னம்பிக்கை தான். பேச்சில் ஒரு நிதானம். பிறரன்பு. வார்த்தைகளில் கண்ணியம். முடிவெடுப்பதில் தெளிவு. செயலில் ஈடுபாடு என்பவையெல்லாம் தன்னம்பிக்கையின் வெளிப்பாடுதான்.

அண்மையில் சக்தி ரீ.வியில் ஒளிபரப்பான 'அரட்டை அரங்கம்' என்னும் நிகழ்வைப் பார்த்தேன். அந்த நிகழ்வில் சிறப்பானவர்களுக்கும். தேவையுடையவர்களுக்கும் உதவிகள் வழங்குவார்கள். அன்று ஒருவர் வரைந்த ஓவியங்களைப் பாராட்டினார்கள். அதில் என்ன தனிச் சிறப்பென்று பார்த்தால் கைகளையும். கால்களையும் முழுவதுமாக இழந்த ஒருவர் வரைந்த ஓவியங்கள் அவை.

தன் கை. கால்களை இழந்தபோதும் அவர் தன்னம்பிக்கையுடன் தன் வாயினால் அந்த ஓவியங்களை வரைந்திருந்தார். இது பாராட்டுக்குரியது மட்டுமல்ல ஊக்கப்படுத்த வேண்டியதும். இது தான் தன்னம்பிக்கையின் முழு உருவம்.

எனக்குத் தெரிந்த ஒரு மாணவி வகுப்பில் எந்நாளுமே முதலாம் இடத்திலேயே நிற்பாள். இவ்வருடம் அவள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினாள். அதில் ஒரு புள்ளியால் அவள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் வாய்ப்பை இழந்தாள்.

அந்த மாணவி அந்தப் பரீட்சை முடிவைத் தன் வாழ்வின் முடிவாக எண்ணி மனமுடைந்து சோர்ந்து போனாள். அதன் பின் அவள் எந்த முன்னேற்றகரமான செயலிலும் ஈடுபடவில்லை.

இந்தச் சோர்வினால் நம் வாழ்விற்கு ஏதாவது பயனுண்டா? அதைரியம் ஏற்படும்போது இது உலகியல்பு என்பதை நாம் நினைவுக்குக் கொண்டு வரவேண்டும்.

என்னால் முடியாது என்று எதை நாம் நினைக்கிறோமோ அது நம்மால் செய்யமுடியாமல் தான் போகின்றது. என்னால் முடியும் என்று நாம் தொடங்கும் எந்தக் காரியமும் நிச்சயமாக நம்மால் ஓரளவேனும் நிறைவேற்றப்படும்.

எனவே. நம்பிக்கையில் நம் எண்ணங்களைக் கட்டியெழுப்பித் தன்னம்பிக்கையுடன் வாழ்வோம்.

28-10-2004

பிரியமுடன் சந்தியா.

## பெண்களுக்குரிய உரிமைகள்

இலங்கைப் பெண்கள் பற்றிய பிரகடனம் இலங்கைப் பெண்களுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டிய உரிமைகளையும், சலுகைகளையும் காட்டி நிற்கின்ற அரச அறிக்கையாக இருப்பதோடு, ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான எல்லா வேற்றுமைகளையும் இல்லா தொழிப்பதைப் பற்றிய சீடோ உடன்படிக்கையினை ஒட்டி வரையப்பட்டுள்ளது. இப்பிரகடனம் 1993ஆம் ஆண்டு அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பிரசித்தப்படுத்தப்பட்டது.

இலங்கை அரசினால் உறுதிப்படுவதாகப் பகன்று இப்பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள உறுதியுரையின் சில பகுதிகள் பின்வருமாறு:-

### அரசியல் மற்றும் சிவில் உரிமைகள்

☆ எல்லாத் தேர்தல்களிலும், அபிப்பிராய வாக்கெடுப்புகளிலும் பெண்கள் வாக்குரிமை அளிப்பதற்கும், அவைகளில் தேர்ந்தெடுக்கப் பட்டு நியமனம் பெறுவதற்கும் உரிய உரிமைகள்.

☆ அரசின் கொள்கைகள் தயாரிக்கப்படும் போதும் அவைகளை நிறைவேற்றும் போதும் அவைகளில் பங்கேற்பதற்கும், பதவிகள் வகிபதற்கும் உரிய உரிமைகள்.

☆ தொழிற்சங்கங்களிலும் அரசியலிலும் பூரணமாக பங்குபற்றுவதற்குள்ள உரிமை.

☆ பிரஜா உரிமையைப் பெற்றுக்கொள்ளல். அதை மாற்றுதல் அல்லது தொடர்ந்தும் அதைப் பேணுதல் ஆகிய விடயங்களில் ஆண்களுடன் சம உரிமைகளைப் பெற்றுக் கொள்ளல்.

☆ தனது குழந்தையின் தேசத்தைத் தீர் மானிப்பதற்குள்ள உரிமை.

### குடும்ப அலகினுள் இருக்கவேண்டிய உரிமைகள்

◆ கலப்புத் திருமணமொன்றாயின் கணவன், மனைவி ஆகிய இருவரினதும் விருப்பப்படி பொதுச் சட்டத்தின்கீழ் செயற்படக்கூடிய உரிமை.

◆ தான் வாழ்வதற்குரிய இடத்தைத் தேர்தெடுப்பதற்கும் மற்றும் விருப்பமான இடங்களுக்குச் சென்று வரவும் உள்ள உரிமைகள் சம்பந்தமாக ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சம உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல்.

◆ எல்லாச் சிவில் நடவடிக்கைகளிலும் ஆண்களுக்கு நிகரான சம உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல்.

◆ தனது திருமணத்தைத் தானே தீர் மானித்துக் கொள்ளும் உரிமை. தனது விருப்பத்திற்கமையத் தன்னுடைய துணையைத் தேடிக்கொள்ளல் மற்றும் விவாகப் பந்தத்தில் இணைந்திருந்த காலத்தினுள்ளும், விவாகரத்தைக் கோருகின்ற சந்தர்ப்பத்திலும் சம உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல்.

◆ குழந்தையின் எண்ணிக்கையைத் தீர்மானித்தலிலும், தன்னுடைய குழந்தையைப் பற்றிய நடவடிக்கைகளிலும் தகப்பனுக்குரிய உரிமையைப் பெண்களும் பெறுதல்

◆ குடும்பப் பெயரைத் தெரிவு செய்தல். நிரந்தர வதிவிடத்தைத் தெரிந்தெடுத்தல் ஆகியவைகளில் சம உரிமை.

◆ சொத்துரிமை, சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல். முகாமைத்துவம் மற்றும் சொத்துக்களை நிர்வகிக்க, அனுபவிக்க அவற்றை நீக்கக் கூடிய செயற்பாடுகளுக்குச் சம உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல். ✲

## சாயங்கால ராகங்கள்

சாயங்காலத்தில் கருகிப்போன
என் இனிய உணர்வுகளே!
சவுக்கடியால் மரத்துப்போன
என் மன ஆசைகளே!
உங்களுக்கும் ஓர் நப்பாசை
என்றாவது மதிக்கப்படுவீர்கள் என்று,
ஆனால் இருபதில் ஒன்று
குறைவான என் வாழ்க்கைக் காலத்தில்
காலங்காலமாக நிகழும் சோகத்தை
நினைத்தவுடன் மாற்றிவிட
நான் ஒன்றும் ஆயுதமேந்திப்
போராடும் கரும்புலி வீரனல்ல
ஏனெனில் ஏற்கனவே ஜடமாய் போன
என் உடலில் மீதமிருக்கும் உயிருக்கு
பிய்ந்த நகங்களுடைய என் கைகளுக்கு
கருகிய நிறமுள்ள என் உடலுக்கு,
எப்போதோ கூறிவிட்டேன்
நான் வெறும் பொம்மையென்று.

- நிர்மலின் யோசப்.



# வவுனியா ஓட்டோ சாரதி கொலை: மூவர் அடையாளம் காணப்பட்டனர்

வவுனியாவில் ஓட்டோ சாரதி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என மூவர் நேற்றுமுன்தினம் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி வவுனியா நகரப் பகுதியில் இருந்து ஒட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திய சிலர் அதன் சாரதியைக் கொன்றுவிட்டு ஒட்டோவைக் கடத்திச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 4 பேர் பின்னர் மாத்தளையில் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தக் கொலை வழக்குத் தொடர்பான அடையாள அணி வகுப்பு நேற்றுமுன்தினம் வவுனியா நீதிமன்றில் இடம்பெற்றது. சந்தேகநபர்கள் நால்வர் அணி வகுப்பில் நிறுத்தப்பட்டனர். அவர்களில் மூவர் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர்.

சந்தேகநபர்கள் ஐவரையும் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம். சிறைச்சாலை அதிகாரிகள் முன்னிலையில் சந்தேகநபர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்யவும் பொலீஸாருக்கு அவர் அனுமதி அளித்தார். அடையாளம் காணப்பட்ட மூவரும் பெரும்பான்மை இனத்தவர்களாவர். (க-3)

## ஐவருக்கு மரணதண்டனை

கொழும்பு,ஒக்.28

பதின்நான்கு வருடங்களுக்கு முன்னர் காலி கிந்தந்தலைக் கிராமத்தில் நபர் ஒருவரை அடித்துக் கொலை செய்தார்கள் என்று குற்றம்சாட்டப்பட்ட ஐவருக்கு காலி மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் மரணதண்டனை விதித்துள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி காலி கிந்தந்தலை என்ற கிராமத்தில் வைத்து நபர் ஒருவர் அடித்து படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து பேருக்கு காலி மேல் நீதிமன்ற நீதிவான் ஐ.எம்.அபயரத்ன மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார். (3-7)

Ashok Leyland

பிரவுன்ஸ் வழங்கும்

மெரைன் டீசல் என்ஜின்கள்

கடலுக்கு செல்லும் படகுகளுக்கும்
இழுவைக்கப்பல்களுக்குமுரிய நம்பிக்கைக்குரிய
குறைவான எரிபொருளில் இயங்கும் இயந்திரங்கள்



- 52 முதல் 170 குதிரை சக்தி வாய்ந்த இயந்திரங்கள்
- விற்பனைக்கு பின்னர் சிறந்த சேர்விஸ் வழங்கப்படும்
- உதிரிப்பாகங்கள் இலகுவில் கிடைக்கும்
- ஆகக்கூடிய முறுக்கு விசையுடன் குறைந்த இயந்திரவேகத்துடன் சிறப்பாக இயங்கக் கூடியது.
- நேரடியாக சக்தி கொடுக்கப்படுவதனால் குறைவான வெப்ப ஏற்பத்திறனுடன், குறைந்த எரிபொருளில் இயங்கி, இயந்திரத்திற்கு நீண்ட ஆயுளை அளிக்கிறது.
- நம்பிக்கைக்குரியது, திறமைமிக்கது, அமைதியாக இயங்கக் கூடியது நீர்சக்தியினால் இயங்கும் மெரைன் கியர்களை கொண்டது.

ஏக விநியோகஸ்தர்கள்

C.F.T. என்ஜினியரிங் லிமிட்ட்

இல. 481, டி பி ஜயா மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2665961-5 பெக்ஸ்: 2665971

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 - 07 - 1931



மறைவு 09 - 11 - 2003

அமரர் வல்லிபுரம் நவரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - கச்சேரி, யாழ்ப்பாணம்)

திதி: 28.10.2004

உரு மறைந்து
நினைவுருவாகி
நினைவுருவாய் உயிர் நினைத்து
உயிர் நிறைந்த நினைவுகளின்
தீராவலி நெருப்பில்
மறக்கவும்
மறக்கவும்
முடியுமோ உனை.

(சி-38840)(39-13-17-24)


நிரந்தர முகவரி: 'கைலையங்கிரி', துரையப்பா வீதி, தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி: 37/1, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி. மக்கள். மருமக்கள்.

## 17 ஆம் ஆண்டை நினைவு கூருகிறோம்

மலர்வு 30 - 12 - 1930



உதிர்வு 28 - 10 - 1987

அமரர் அ.செ.அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய அரச எழுதுவினைஞர்
வனத்திணைக்களம், யாழ்ப்பாணம்)

நீதிமானுடைய தகப்பன் மிகவும்
களிகூருவான் ஞானமுள்ள
பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான்.
(நீதிமொழிகள்: 23:24)

நிரந்தரமுகவரி: தபாலக வீதி, சாவகச்சேரி.

தற்காலிகமுகவரி: 5ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி, உடுவில்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(37999)(39-13-17-24)

ஞானியார் கல்விக் கழகம்

GNANIAR EDUCATIONAL SOCIETY

இம்பர்சிட்டி - பருத்தித்துறை நடத்தும்

பரிசளிப்பு விழா

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து 2004ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 176 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு.

இடம்: யா/வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி மண்டபம்
காலம்: 2004.10.31 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி (புதிய நேரம்)
தலைவர்: திரு.வே.நவரத்தினராசா (தலைவர், ஞானியார் கல்விக் கழகம்)
பிரதம விருந்தினர்:
திரு.மு.திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)
சிறப்பு விருந்தினர்கள்:
திரு.சு.வசந்தகுமார் (பிரதேச செயலர், பருத்தித்துறை)
திரு.க.கமலானந்தன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி, வடமராட்சி வலயம்)
திரு.ப.ஆதித்தன் (வடமராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்)
திரு.க.யோகேந்திரநாதன் (கிராம அலுவலர், அல்வாய் வடமத்தி)

இந்நிகழ்வில் கலந்து எமது வளரும் பயிர்களுக்கு உரமூட்டுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இம்பர்சிட்டி, பருத்தித்துறை. - ஞானியார் கல்விக் கழகம்.

குறிப்பு: மாணவர்களுக்குத் தனித்தனியாக அனுப்பிய அழைப்பிதழ்கள் கிடைக்கத் தவறும் பட்சத்தில் மேற்படி பரீட்சையில் சித்தியெய்திய 176 வடமராட்சி மாணவர்களையும் மற்றும் பெற்றோர்களையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இம்பர்சிட்டி,
பருத்தித்துறை. (38002) (24-13-17) - ஞானியார் கல்விக் கழகம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 20 - 09 - 1930



இறப்பு 28 - 09 - 2004

திருமதி நடராசா கமலாம்பிகை

(நாகேஸ்வரி)

காலச் சுமை தாங்கி போலே
மார்பில் எமைத் தாங்கி
வீழும் கண்ணீர் துடைத்த தெய்வமே
எங்கு சென்றீர்கள்!
எங்கள் உணர்வுகள் உள்ளவரை
நீங்கள் எங்களுடன் வாழ்வீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.


இன்று (28.10.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.

(37848)(42-13-17-24)

# பூநகரியில் அரும்பொருள் காட்சியகம்!



பூநகரி,ஒக்.28

பூநகரிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கால கோட்டைக்குச் சமீபமாக அரும்பொருள் காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளால் பூநகரி இராணுவத் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் தவளை' இராணுவ நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட கனரக ஆயுதங்கள், கவசவாகனங்களின் பாகங்கள் மற்றும் இப்பகுதியில் மீட்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் என்பன இந்த அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்படவிருப்பதாகப் பூநகரி பிரதேச சபையின் செயலாளர் பவர்னி தெரிவித்துள்ளார்.

தற்போது அமைக்கப்பட்டுவரும் இந்த அரும பொருள் காட்சியகக் கட்டடத்தின் ஒருபகுதித் தோற்றத்தை அருகிலுள்ள படத்தில் காணலாம். (4-403)

# மழலைகள் கணனிப் பூங்கா முல்லைத்தீவில் அமையும்!

புதுக்குடியிருப்பு,ஒக்.28

முல்லைத்தீவில் மழலைகளுக்கான கணனிப் பூங்கா ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி பிற்பகல் மூன்று மணியளவில் முல்லைத்தீவில் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் முரளி, கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மழலைகளுக்கான முதலாவது கணனிப்பூங்கா இது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (4-353)

# துணுக்காய் பிரதேச செயலகை சிறுவர், முதியோர் தினவிழா

மல்லாவி,ஒக்.28

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் சிறுவர், முதியோர் தினவிழா கடந்த வாரம் மல்லாவி மத்திய கல்லூரியில் பிரதேச செயலர் நா.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் துணுககாய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.பரந்தாமனும் துணுக்காய்ப் பிரதேச நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.அசோகன், அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.புவிதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

சிறுவர், முதியோர் தினத்தையொட்டித் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.(10-322)

# வீதி விபத்துக்கள் தொடர்பாக கிளிநொச்சியில் செயலமர்வு

கிளிநொச்சி,ஒக்.28

கிளிநொச்சி மாவட்ட மருத்துவச் சங்கத்தின் ஏற்பாட்டில் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான முழுநாள் செயலமர்வு ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி கிளிநொச்சி 1-9 தங்ககத்தில் நடைபெறவிருக்கின்றது.

காலை 10 மணி முதல் 4 மணி வரை இச செயலமர்வு நடைபெறும். இதில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், அரச உயர் அதிகாரிகள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் உட்பட உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவிருக்கின்றனர்.

தொடர்ந்து எதிர்வரும் நாள்களில் விசர் நாய்க்கடி, தற்கொலை முயற்சிகள், பாம்பு கடி என்பன தொடர்பாகவும் செயலமர்வுகள், மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள கிளிநொச்சி மாவட்ட மருத்துவர் சங்கம் தெரிவித்திருக்கிறது. (4)

# சமூகநலப் பயிற்சிநெறியின் இரண்டாம் கட்டம் நிறைவு

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவும் கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்களமும் இணைந்து ஏ.எஸ்.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுகாதாரத் திணைக்களத்தினூடாக




நடத்தும் சமூகநலப் பயிற்சிநெறியின் இரண்டாம் கட்டப் பயிற்சி கடந்த 23ஆம், 24ஆம் திகதிகளில் கிளிநொச்சி சென்.திரேசா மகளிர் கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் நடத்தப்பட்டது.

இப்பயிற்சிநெறியில் முதலுதவி, உடல் அமைப்பும் தொழிற்பாடும், முதலுதவிச் செய்முறைகள், தொற்றுநோய்கள், சுகாதார நடைமுறைகள் போன்றவை தொடர்பான கருத்துரைகளும் இடம்பெற்றன.

பயிற்சியை நிறைவுசெய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும், அதற்கான மருந்துகள், உபகரணங்கள் என்பனவும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவால் வழங்கப்பட்டன.

இப்பயிற்சிநெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் தலா 50 மாணவர்கள் கலந்து கொண்டனர். (10-203)

# முல்லைத்தீவு நகர விற்பனை நிலையங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கை

விசுவமடு,ஒக்.28

முல்லைத்தீவு நகரப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அண்மையில் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை மூலம் சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் இயங்கிவந்த மூன்று உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டதுடன், இரண்டு உணவகங்களில் சமைத்த உணவுகளை விற்பதற்கும் தடைவிதிக்கப்பட்டது.

வேறு சில வர்த்தக நிலையங்களில் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக இருந்த ரயர்கள், ரின்கள், பொலித்தீன் பைகள், மீன் தொட்டி என்பவற்றை அகற்றுமாறு கூறியதுடன், ஏனைய கழிவுகள் அப்பகுதிப் பிரதேச சபையினரால் அகற்றப்பட்டன.

அத்துடன், உணவகங்கள் மற்றும் பல்பொருள் வாணிப நிலையங்களில் காணப்பட்ட காலாவதியான, பழுதடைந்த உணவு வகைகளும் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டன.

விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் வருமுன் காத்தல் தொடர்பான செயற்பாட்டுக் கருத்துக்களும் அதிகாரிகளால் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளரின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (10-402-202)

## முல்லை மாவட்ட அரச அதிபர் வெளிநாடு பயணம்

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கடந்தவாரம் புலமைப் பரிசில் கிடைத்து வெளிநாடு பயணமானார். இவரின் கடமைகளை மன்னார் மாவட்ட அரச அதிபர் வே.விசுவலிங்கம் ஆற்றுவார் என முலலைத்தீவு மாவட்ட அரச அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (4-353)

# பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் பாலங்கள் சேதம்; பயணிகள் சிரமம்!

கிளிநொச்சி,ஒக்.28

பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள கண்டாவளைப் பாலம், கனகராயன் ஆற்றுப்பாலம் என்பன சேதமடைந்துள்ளன. இதனால் இவ்வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்கியிருக்கின்றனர்.

இந்தப் பாலங்களைப் புனரமைப்புச் செய்வதற்காகத் தற்காலிக பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் பலத்த மழையினால் இப்பாலம் போக்குவரத்துச் செய்யமுடியாதநிலையில் உள்ளது. இப்பாலத்தின் ஊடாகப் பயணம் செய்பவர்கள் மிகுந்த அச்சத்துடனேயே பாலத்தைக் கடக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4-7)

# மதுபான நிலையத்தை அகற்றுமாறு பிரதேச செயலரிடம் கோரிக்கை

பூநகரி,ஒக்.28

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் நாச்சிக்குடா கிராமத்தில் உள்ள மதுபான விற்பனை நிலையம் மற்றும் கள்ளுத்தவறணை ஆகியவற்றை அங்கிருந்து அகற்றுமாறு பிரதேச செயலிடமும் மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறையினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தில் உள்ள ஆண்களில் கணிசமானோர் மது அருந்திவிட்டுத் தமது குடும்பத்தினருடன் சச்சரவில் ஈடுபடுவதுடன், வீதியால செல்வோருடனும் சச்சரவில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், அந்தக் குடும்பங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் இரவு வேளையில் கல்விகற்க முடியாத நிலை ஏற்படுவதுடன், வீதியால் செல்வோரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இவ்வாறான நிலையைத் தடுப்பதறகாகவே மதுபான விற்பனை நிலையத்தையும் கள்ளுத்தவறணையையும் அங்கிருந்து அகற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாக நாச்சிக்குடா கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.மரியநாயகம் தெரிவித்துள்ளார். (10-403)

# புதுக்குடியிருப்புக்கு விரைவில் மின்சாரம்!

யாழ்ப்பாணம்,ஒக்.28

புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு விரைவில மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று இலங்கை மின்சார சபையின் வடமாகாண முகாமையாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு ஜெனரேடர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அதனைக் கொழும்பிலிருந்து வன்னிக்கு எடுத்து வருவதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சிடம் மின்சார சபை கோரியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு ஜெனரேட்டர் எடுத்து வரப்படும்.

முதற்கட்டமாகப் புதுக்குடியிருப்பிலுள்ள 150 வீடுகளுக்கு இதன் மூலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து படிப்படியாக ஏனைய வீடுகளுக்கும் வழங்கப்படும்.

தற்போது புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மின்சார சபையினால் மின்சார விநியோகத்துக்கான ஆரம்பக்கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார். (4-7)

## தொழில் திணைக்கள ஆணையாளர் வன்னி விஜயம்

புதுக்குடியிருப்பு,ஒக்.28

வவுனியாவில் இயங்கிவரும் தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் சி.குணபாலன் அண்மையில் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

புதுக்குடியிருப்பு பெரும்பாக உத்தியோகத்தர் பணிமனை, உதவி அரச அதிபர் பணிமனை, முல்லைத்தீவு செயலகம் ஆகிய இடங்களுக்கு அவர் சென்றார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்யும் தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் இவர் ஆவார். (4-353)






மன்னார் ஆண்டான்குளம் பகுதியில் 105 ஏக்கர் வயல்களில் செய்கை பண்ணப்பட்ட நெல்லின் அறுவடை விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மன்னார் மாவட்ட அரச அதிபர் வே.விசுவலிங்கம் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் செய்கை மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# சதுரங்கப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஒக்.28

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சதுரங்க விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம், கொழும்பு, லண்டன் பழைய மாணவர் சங்கங்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய சதுரங்கப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரியும் அதிக இடங்களைப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 21 பாடசாலைகள் கலந்துகொண்டன.

10,12 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்ற போட்டிகள் தனிநபர் போட்டிகளாகவும் 15,19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்ற போட்டிகள் குழு நிலைப் போட்டிகளாகவும் இடம்பெற்றன.

### தனிநபர் போட்டிகள்

**10 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம் கே.கௌசிகன் (மகாஜனக் கலலூரி), 2ஆம் இடம் ஸ்ரீ லக்ஸ்மன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), 3ஆம்இடம் சா.அபிராம் (மகாஜனாக் கல்லூரி).

**10 வயதின் கீழ் பெண்கள**

முதலாமிடம் பா.மாதங்கி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் க.பிரியங்கா (உடுவில் மான்ஸ் வித்தியாலயம்), 3ஆம் இடம் பெனடிக்ற் பிரெய்சிஹனா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**12 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம் த.தவலோஜன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), 2ஆம் இடம் அஜெனுகானந (யாழ்.இந்துக் கல்லூரி), [illegible]ம் இடம் சோ.தனஞ செயன் (பருத்தித்துறை [illegible] கல்லூரி).

**12 வயதின் கீழ் பெண்கள்**

முதலாமிடம் க.சுபாங்கி (மகாஜனாக் கல்லூரி), 2ஆம் இடம் எம்.சாந்தமரின் (வேம்படி மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் யோ.கெனித்தா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கெ.லக்ஸி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

### குழு நிலை ஆட்டங்கள்

**15 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

2ஆம் இடம் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

3ஆம் இடம் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**15 வயதின் கீழ் பெண்கள்**

முதலாமிடம் - வேம்படிமகளிர் கல்லூரி.

2ஆம் இடம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

3ஆம் இடம் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**19 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

2ஆம் இடம் - தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

3ஆம் இடம் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

**19 வயதின் கீழ் பெண்கள்**

முதலாமிடம் - வேம்படி மகளிர் கல்லூரி

2ஆம் இடம் - தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி,

3ஆம் இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

பரிசில்கள் பெறுவோர் விவரம் வருமாறு.

**15 வயது ஆண்கள்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சி.அபயன், சி.சேரன், க.சுரேஷ்குமார், நா.வர்மன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த சி.ராகுலகீதன், ச.கோகுல், சோ.விஷ்ணு சுந்தர், றொ.ஜெரோசன்.

**15 வயது பெண்கள்**

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ந.கௌசிகா, ப.சுவர்ணா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த க.திவ்வியா, செ.மயூரா சி.லக்சியா (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), சு.பிருநதா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வ.கிருத்திகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சி.சிவவாணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**19 வயது ஆண்கள்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சி.கோபிகணேஸ், சி.சுலக்ஸன், கி.விநோயன், த.திவாகரன். சா.ஸ்ரீகோகுலன் மற்றும் மலலாகம் மகாவித்தியாலயம் ம.ஜெயந்தன், பருததித்துறை ஹாட்லிக் கல்லூரி தி.திலீபன்.

**19 வயதுப் பெண்கள்**

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சி.வித்தியாரணி, பு.சுகன்ஜா, ஜெ.கஜானி, பெ.நிவேதிகா மற்றும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த இ.துளசா, த.கஜானி, சி.சிந்துபாரதி.

இப்போட்டிகளுக்கு இணைப்பாளராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சதுரங்க விளையாட்டுக் கழகப் பொறுப்பாசிரியர் கந்தசாமி அருளானந்த சிவம் செயற்பட்டார்.

(10-86)

## அரையிறுதி ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஒக்.28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் அரையிறுதி ஆட்டங்களின் விவரம் வருமாறு:

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:

**18 வயதுப்பிரிவு**

✪ கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

✪ 16 வயதுப் பிரிவுக்கான ஆட்டமும் இடம்பெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

**16 வயதுப்பிரிவு**

✪ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

**18 வயதுப்பிரிவு**

✪ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி. (10-86)


**வாடகைக்கு**

சுமார் 10 பேரைச் சேர்த்து ரீயூசன் நடத்துவதற்கு உகந்த இடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
3/3, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (38028)(42)


## வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனானது

வலி.வடக்கு, ஒக்.28

முன்னாள் பிரதேச செயலாளர் அமரர் கா.சந்திரராசா ஞாபகார்த்தமாக சங்கானைக் கல்விக கோட்டத்திற்கு உட்பட்ட 14 வயதுப் பிரிவினர் இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கலலூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் மிகவும் உற்சாகமாக விளையாடிய போதிலும் ஆட்டமுடிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (10-86)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

கரவெட்டி, ஒக்.28

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் ஐம்பதாவது பிறந்த தினத்தை யொட்டி 11 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போடடி அடுத்த மாதம் 05 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியினை யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமராட்சி இளையோர் சம்மேளனம் நடத்தவுள்ளது. உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறும்.

(10-70)


**Study In Malaysia**

சகல விதமான பாடநெறிகளுக்குமான அனுமதிகள் யாழ் நகரில் இப்பொழுது வழங்கப்படுகின்றன.

I. DIPLOMA (2 Years)
II. HIGHER NATIONAL DIPLOMA (HND • 1 Year)

UK இல் Degree

மலேசியாவில் பிரபல கல்லூரிகளில் ஒன்றான COLLEGE WIT இல் இருந்து வருகை தந்துள்ள விரிவுரையாளர்

MR.HOMABALAN RATNAM,
HEAD OF MARKETING
AND ADMISSION DEPARTMENT,
COLLEGE WIT.

அவர்களால் அனுமதிகளுக்கான நேர்முகத்தேர்வு இப்பொழுது யாழ்.நகரில் நடைபெறுகிறது.

அனுமதிக்கு முந்துங்கள்.

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன

திகதி : 29,30,31-10-2004
நேரம் : 10a.m. – 4 p.m.
முகவரி:

வே.அம்பிகைபாகன்,
காங்கேயன் கலைக்கோட்டம்,
போக்காலை வீதி,
உடுப்பிட்டி,

தொலைபேசி எண். 0776724350.
(38031)(42-19-44)



**தவறிவிட்டது**

புத்தூர் மேற்கு, நவக்கிரியைச் சேர்ந்த துரைராசா அலேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல: 621473054V கொழும்பு முகவரியுடன் உள்ளது. (308 முத்துவெல்ல மாவத்தை, கொழும்பு - 15), தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் இரண்டும் 25ஆம் திகதி திங்கட்கிழமை அச்சுவேலி பஸ்நிலையப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சியான் ரேடர்ஸ்,
பிரதான வீதி, அச்சுவேலி.
(C/38506)(42-19-45) T.P.: 0776102579, 077 3107736



**அழகுக்கலையில் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம்!**

MOON BEAUTY CARE இயக்குநரும், அழகுக்கலை பயிற்றுவிப்பாளரும், நடன ஆசிரியையும் ஆன திருமதி B.அகிலா அவர்களால் பயிற்சி வழங்கப்படும்.

1. ஒரு மாத கால பயிற்சிநெறி (சான்றிதழ் இல்லை)
2. Diploma பயிற்சி (3 மாதம், சான்றிதழ் உண்டு)
3. Advance பயிற்சி (3 மாதம், சான்றிதழ் உண்டு)

Course விவரம் சம்பந்தமான மேலதிக விவரங்கள் ஆசிரியையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

✼ யாழ்ப்பாணத்தில் (இல. 94. பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி)
ஆரம்பம்: 30. 10. 2004 மாலை 2. 00 (பு.நே)
✼ மானிப்பாயில் RTR பெண்கள் அழகுக்கலை பயிற்சி நிலையம் (பிரதான வீதி)
ஆரம்பம்: 30. 10. 2004 முற்பகல் 11. 00 மணி (பு.நே).
✼ வடமராட்சி, தென்மராட்சியிலும் பயிற்சிகள் இடம்பெறும்.

மேலதிக விவரங்களுக்கு 0777–570138

✼ ஏற்கனவே பதிவை மேற்கொண்டவர்களும் புதிதாக சேர விரும்புவர்களும் அன்று சமுகம் தரவும்.
(38029)(42-19-44)



**நத்தாரை முன்னிட்டு**

**வெளிநாட்டு அழைப்பு விசேட கட்டணத்தில்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சவுதி அரேபியா, குவைத், இந்தியா | 25/= | Bahrain, U.A.E. | 30/= | ரஷ்யா, கங்கேரி | 15/= |

★ மிக மிகக் குறைந்த கட்டணத்தில் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கான அழைப்புக்களுக்கும்,
★ குறைந்த கட்டணத்தில் செய்மதி மூலம் விரைவான இன்ரநெற் Browsing சேவைக்கும்,
★ 2006ஆம் ஆண்டுக்கான அமெரிக்க Green Card விசா விண்ணப்பம் உடனுக்குடன் அனுப்புவதற்கும்.
★ இன்ரநெற் இணைப்பு அழைப்புக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்வதற்கும்.
★ குறைந்த கட்டணத்தில் பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள் செய்துகொள்வதற்கும்

நாடுங்கள்

விசிற்ரோக். நெற்,
315A, பரமேஸ்வராச் சந்தி (முதலாம் மாடி),
பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P. No.: 4591298, 222 6637
(38034)
(33-42-19-44)



உ
மருதடி விநாயகர் துணை

மங்களகரமான ஆரம்பம்
இதோ மானிப்பாயில்
புதியதோர் உதயம்

AINGKAR GRAPHICS

எமது சேவைகள்:
Offset Printing
Scanning
Screen Printing
Vide Capturing
Photo Editing
CD Writing
Computer Designing/ Type Setting


MP3, Video, Audio, Games CDs & Soft ware CDs
PC Sales, Service , Maintenance & Repairs

சகல விதமான Hand Phone மற்றும் அவற்றிற்கான உதிரிப் பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்.........

Dialog kit Keep in Touch

AINGKAR GRAPHICS
Hospital Lane, Manipay.
Call me @ : 0777 570106.
E mail : aingar77@yahoo.com aingharan@wow.lk


# உலகின் அதி உச்ச அதிகாரப் பதவிக்கான போட்டி...



**கி.பி.** 1776ஆம் ஆண்டு வரை அமெரிக்க நாடு பிரிட்டிஷ் முடியாட்சியின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1776ஆம் ஆண்டுமுதல் 1783ஆம் ஆண்டுவரை அமெரிக்கர்கள் சகலரும் ஒன்றிணைந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துககு எதிராக மேற்கொண்ட போராட்டங்களின் பலனாகத் தமது சுதந்திரத்தை வென்றெடுத்தனர்.

1783ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 'வார்செல்ஸ்' ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்க நாட்டின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டது. அது அமெரிக்க ஐக்கிய குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்துடன், நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு உகந்த வகையில் உருவாக்கப்பட்ட அரசமைப்பொன்றும் நாட்டுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

தத்தமது பிரதேச அபிவிருத்திகளை சுதந்திரமாக மேற்கொள்ளும் அதிகாரத்தை சகல மாநிலங்களுக்கும் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த அரச்மைப்பு முழு நாட்டின் அபிவிருத்தியை அடிப்படை இலக்காகக் கொண்டது.



உலகில் இன்று நடைமுறையில் இருந்து வரும் அரசமைப்புக்களில் மிகப் பழைமைவாய்ந்ததாகக் கருதப்படும் அமெரிக்க அரசமைப்புக்கு வயது 200 வருடங்கள்.

அமெரிக்க ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை அதி விசேடம்மிக்கதொன்றாகும். இன்று உலகில் ஜனாதிபதி நடைமுறை மேற்கொள்ளப்படும் பெரும்பாலான நாடுகளில் ஜனாதிபதி பொதுமக்களது நேரடி வாக்குகளினாலேயே தெரிவுசெய்யப்படுகிறார். ஆனால், அமெரிக்க ஜனாதிபதி இவற்றுக்கு முற்றிலும் மாறுபட்ட நடைமுறைமூலமே தெரிவுசெய்யப்படுகிறார்.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் நேரடியாக ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிப்பதில்லை. இது ஜனநாயக நடைமுறைக்கு ஏற்புடையதல்ல என்பது ஒரு சாராரின் கருத்தாகும்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும். அது குறிப்பிட்டதொரு ஒழுங்கில் இடம்பெற்று வருகின்றது. ஒவ்வொரு நான்காம் ஆண்டின் இறுதியிலும் நவம்பர் அல்லது டிசெம்பர் மாதத்தில் நடத்தப்படும் இத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளராக அடுத்துவரும் ஆண்டின் ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார். இதனை மேலும் விரிவாகக் கூறவேண்டுமானால், குறிப்பிட்ட வருடத்தின் நவம்பர் மாதத்தில் வரும் முதலாவது செவ்வாய்க்கிழமையன்று ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டுமென அரசமைப்பு மூலம், உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்வருடம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அபேட்சகராக நியமனம் பெறுவதற்கான சில அடிப்படை நிபந்தனைகள் அரசமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக போட்டியிட விரும்பும் ஒருவர் பிறப்பால் அமெரிக்கப் பிரஜையாக இருக்கவேண்டுமென்பதுடன், 35 வயதைப் பூர்த்திசெய்தவராயும் இருத்தல் அவசியம். அது மட்டுமன்றி அவர் அமெரிக்காவில் தொடர்ச்சியாகப் 14 ஆண்டுகள் வசித்தவராயும் இருத்தல் அவசியமாகிறது.

மேற்கண்ட தகைமைகளைக் கொண்டிருக்கும் ஒருவர் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிட விரும்பினால், சமஷ்டித் தேர்தல் ஆணைக்குழுவில் தம்மை வேட்பாளராகப் பதிவுசெய்துகொள்ள இயலும். சுயேசசை வேட்பாளரொருவரே அவ்விதம் நேரடியாகப் பதிவை மேற்கொள்ள இயலும். ஏதாவதோர் அரசியல் கட்சி சார்பாகப் போட்டியிடுவதாயின் அக்கட்சியின் உத்தியோகபூர்வ அனுமதி பெறப்படல் வேண்டும். அரசியல் கட்சிகளின் பொது மாநாட்டில் அக்கட்சி சார்பாக நிறுத்தப்படத்தக்க தகுதியான வேட்பாளர் தெரிவுசெய்யப்படுவார். அவரே அக்கட்சி சார்பான ஜனாதிபதி வேட்பாளராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுவார். இதேவகையிலேயே உப ஜனாதிபதிப் பதவிக்கான தகுதியான வேட்பாளரும் தேர்ந்தெடுக்கப படுவார்.

அடுத்து 'எலெக்ரோறல் கொலிஜ்' தேர்தல் சபை என அழைக்கப்படும் தேர்தல் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பொதுமக்கள் வாக்களிப்பர். இத்தேர்தல் சபைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கு ஒவ்வோர் அரசியல் கட்சி சார்பிலும் வேட்பாளர்களின் பெயர்களடங்கிய பட்டியலொன்று சமர்ப்பிக்கப்படும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களின் தொகைக்குச் சமமான வேட்பாளர்களது பட்டியலே இவ்விதம் கையளிக்கப்படும். வெற்றிபெறும் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ பிரதிநிதிகளாக நியமனம் பெறுவர். இவ்விதம் தேர்தல் சபைக்குத் தெரிவாகும் மொத்த உறுப்பினர்களின் தொகை 538 ஆகும்.

அமெரிக்காவிலுள்ள 50 மாநிலங்களும், கொலம்பியா என அழைக்கப்படும் மாவட்டமும் சேர்ந்து மொத்தம் 51 நிர்வாகப் பிரிவுகள் தற்போது அமெரிக்க ஐக்கிய குடியரசில் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் ஒவ்வொரு மாநிலத்துக்குமென ஒதுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் தொகை சமமானவையல்ல. மக்கள் தொகை மற்றும் நிலப்பரப்பு ஆகியனவற்றின் அடிப்படையிலேயே இவ்விதம் பிரதிநிதிகளின் தொகையும் நிர்ணயிக்கப்படுகின்றது. இவ்வித அடிப்படையில் 438 பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 50 மாநிலங்களிலிருந்தும் 435 பிரதிநிதிகளும், கொலம்பியா மாவட்டத்திலிருந்து 3 பிரதிநிதிகளுமாக மொத்தம் 438 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். அதேவேளை, அமெரிக்க செனட்சபை உறுப்பினர்களாக 100 பேர் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இருவர் என்ற விகிதத்தில் தெரிவாகின்றனர். அதேபோல் சபையின் 438 உறுப்பினர்களும் செனட் சபையின் 100 உறுப்பினர்களுமாக முழு உறுப்பினர்களின தொகை 538 என்றாகிறது..

தேர்தல் சபை உறுப்பினர்கள் பொதுமக்களால் தெரிவுசெய்யப்படுவர். அவ் வாக்குச் சீட்டுக்களில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் பெயர்கள் இடம்பெற்றிருக்காது. ஆயினும், ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காகவே சாதாரண பொதுமக்கள் இவ்விதம் வாக்களிப்பில் வாக்களிக்கின்றனர். தமக்கு அபிமானமான ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்கும் வகையில் அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்தல் சபை வேட்பாளருக்கே தமது வாக்கைப் பொதுமக்கள் செலுத்த நேரிடுகிறது. இவ்வித வாக்களிப்பு குறிப்பிட்ட தேர்தல் ஆண்டின் நவம்பர் மாதத்தின் முதலாவது செவ்வாய்க்கிழமையில் நடத்தப்படுகிறது.

இவ்விதம் தெரிவாகும் தேர்தல்சபை உறுப்பினர்கள் நாட்டின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிப்பில் கலந்துகொண்டு வாக்களிப்பர். இது குறிப்பிட்ட வருடத்தின் டிசெம்பர் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமையை அடுத்துவரும் திங்கட்கிழமை நடைபெறும். அந்தந்த மாநிலங்களின் தலைநகரில் இவ்வாக்களிப்பு இடம்பெறும். தேர்தல் சபை அங்கத்தவர்கள் தாம்சார்ந்த அரசியல் கட்சி சார்பான ஜனாதிபதி வேட்பாளருக்கே தமது வாக்குகளைச் செலுத்தவேண்டுமென்ற கட்டுபாட்டுவிதி சகல மாநிலங்களிலும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஒரு சில மாநிலங்களிலேயே அவ்வித கட்டுப்பாடு உண்டு. ஆனாலும், தாம் சார்ந்த கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி வேட்பாளருக்கே கட்சிகளைச் சேர்ந்த தேர்தல் சபை உறுப்பினர்கள் தமது வாக்கைச் செலுத்துவதே சம்பிரதாயமாகும்.



அந்தவகையில், தேர்தல் சபைக்கான வாக்களிப்பில் தெரிவாகும் உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பில் எவருக்கு வாக்களித்தனர் என்ற விவரங்களைக் கொண்டே ஜனாதிபதியாகத் தெரிவாகவுள்ளவரை நாம் உறுதிசெய்துகொள்ள இயலும். ஆயினும், தொடர்ந்துவரும் ஜனவரி மாதம் ஆறாம் திகதியே ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

மாநிலங்களின் தலைநகரத்தில் இடம்பெறும் வாக்களிப்பின் பின் வாக்குச்சீட்டுக்கள் தேர்தல் சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும். அதையடுத்து அமெரிக்க காங்கிரஸின் கூட்டம செனட் சபைத் தலைவரின் தலைமையில் கூடி வாக்குகள் கணக்கிடப்படும். கணக்கெடுப்பு முடிவில் குறிப்பிட்ட மேலதிக பெரும்பான்மை கிட்டாதவிடத்து 50 விகிதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறும் வேட்பாளர் (270 வாக்குகளோ அல்லது அதற்கு மேலதிகமாகவோ) ஜனாதிபதியாகத் தெரிவாவார். இவ்விதம் 270வாக்குகளை எந்தவோர் வேட்பாளரும் பெறாதவிடத்து, போட்டியிட்ட வேட்பாளர்களில் ஆகக் கூடிய வாக்குகளைப் பெற்ற மூன்று வேட்பாளர்கள் வரிசைக் கிரமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிலொருவர் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். இவ்விதம் தெரிவு அச்சபை உறுப்பினர்களிடையே நடத்தப்படும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படும்.

ஒவ்வொரு மாநிலங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் தொகை எவ்வாறமைந்த போதிலும், இத்தகைய வாக்கெடுப்பில் வாக்களிக்கும் உரிமை ஒவ்வொரு மாநிலம் சார்பாகவும் ஒரு வாக்கு என்ற வகையிலேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வித நடைமுறை மூலமும் ஜனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுக்க இயலாவிடில், அடுத்துவரும் மார்ச் மாதம் 4ஆம்திகதி உப ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரே ஜனாதிபதியின் பதவியை ஏற்குமாறு கோரப் படுவார்.

ஜனாதிபதிப் பதவிக்கான தேர்வு நடைமுறையே உப ஜனாதிபதிப் பதவிக்கான தேர்வின் போதும் கடைப்பிடிக்கப் படும். வாக்காளர்களுக்கு ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதி ஆகிய இரு பதவிகளுக்கான தமது விருப்புகளை வெளிப்படுத்த ஒவவொரு வாக்குகளை அளிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். ஜனாதிபதிப் பதவிக்கான தேர்வுபோன்று, உப ஜனாதிபதிப் பதவிக்கான தேர்விலும், வேட்பாளரொருவரும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாதவிடத்து, அதிகூடிய வாக்குகளைப பெறும் வேட்பாளர்களில் இருவர் தெரிவுசெய்யப்பட்டு, செனட்சபை உறுப்பினர்கள் மத்தியில நடத்தப்படும் இரகசிய வாக்கெடுப்பு மூலம் அவர்களிலொருவர் உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

**- வியெஸ்ரி -**

இம்முறை கடும்போட்டியின் மத்தியில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜோன்கெரியும் குடியரசுக் கட்சியின் சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் தேர்தல் வேட்பாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

தற்போது தொலைக்காட்சி நேரடி விவாதங்கள் மூலம் தத்தமது எதிர்காலக் கொள்கைகளை இவ்விரு வேட்பாளர்களும் வெளிப்படுத்தியுள்ளனர். ஈராக் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், குறித்த பொதுமக்களின் கருத்து இத்தேர்தலில் பெருமளவில் பிரதிபலிக்கக்கூடும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட இரு பொதுஜன அபிப்பிராய கருத்துக் கணிப்புக்களின்படி ஜோர்ஜ் புஷ் ஒரு தடவையும், ஜோன் கெரி மற்றொரு தடவையும் முன்னணி வகித்துள்ளனர். இந்த வரும் சில நாளில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகவுள்ளார். ★




ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு யாழ்.செயலகத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபை நடத்தும் ஆவணக் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை யாழ்.பொதுநூலகத்தில் ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஐக்கிய நாடுகள் சபையின் யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி கெய்சுகி முறாட்டா உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் கண்காட்சியைப் பார்வையிடுபவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரபா)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வே ஒரே தீர்வு!

## பேரினவாதிகளின் கனடா மாநாட்டில் பேராசிரியர் விளக்கம்

கனடாவை ஒத்த சமஷ்டி அமைப்பிலான மத்திய, மாகாண அரசுச் செயற்பாடுகளே இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமைய முடியும் என்று தெரிவித்தார். "பெடரேசன் ஒவ போறம்" என்ற அமைப்பின் இணைத் தலைவர் பேராசிரியர் டேவிட் கமரோன். சிங்கள இனவாத அமைப்பு ஒன்று கனடாவில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே பேராசிரியர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஐக்கிய தேசிய அமைப்பு என்ற பெயரில் கனடாவில் செயற்பட்டுவரும் சிங்கள இனவாத அமைப்பே இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. கனடாவில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளில் இந்த அமைப்பு முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது

ஸ்காப்ரோ நகர மண்டப அறைகளில் இநதக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அக்கூட்டம் எதிர்பார்த்தளவுக்கு வெற்றியளிக்காமல் பிசுபிசுத்துப்போய்விட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. கூட்டத்துக்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் நிகழ்வுக்கு வருகை தரவில்லை. ஊடகவியலாளர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்த போதும், அவர்களும் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நோர்வேயில் இத்தகைய ஓர் இனவாத மாநாடு இடம்பெற்றது. அதுவும் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. அதன் தொடர்ச்சியாகவே இந்த மாநாடு இடம்பெற்றது. அந்த மாநாட்டின் பெறுபேறுகளை ஆராய்வதே கனடா மாநாட்டின் நிகழ்ச்சிநிரலில் முதலிடம் பெற்றிருந்தது. சுமார் 40 பேர்வரையிலானோர் மாநாட்டில் கலந்துகொண்டனர். அவர்களில் கனடாவிற்கான இலங்கைத் தூதுவர் கீதா டி சில்வா மற்றும் ரொரன்டோ நகருக்கான இலங்கைத் தூதரக அதிகாரி பூலோக சிங்கம் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

சிறுவர்கள் ஆயுததாரிகளாதல், தற்கொலைத தாக்குதல்கள், இலங்கையில் நடந்த அனர்த்தங்கள் ஆகியவை தொடர்பான புகைப்படங்களின் கண்காட்சியும் மாநாட்டின் ஓர் அங்கமாக இடம்பெறும் என முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மாநாடு பிசுபிசுத்துப் போனதால், இவை எல்லாம் நிறுத்தப்பட்டன. கூட்டம் மட்டுமே இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் ஓர் அங்கமாக 'இலங்கைத் தீவிற்குள் ஜனநாயக ரீதியில் ஏற்கக்கூடிய தான தீர்வைக் காண்பதற்கு ஏதுவாக சமாதான முயற்சிகள் அமைவுபடுத்தப்பட்டுள்ளனவா? - என்ற தலைப்பிலான கேள்வி - பதில் நிகழ்ச்சியில் பதிலளிப்பதற்காக 'பெடரேசன் ஒவ் போறம்' என்ற அமைப்பின் இணைத் தலைவர் பேராசிரியர் டேவிட் கமரோன் வந்திருந்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பேராசிரியர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவரது அமைப்பு இலங்கையில் முரண்பாட்டுக்குரிய இரு தரப்பினரையும் சமாதான முயற்சிகளில் தொடர்ந்து பங்கேற்க வைப்பதற்கான பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது.

இந்த முயற்சியில் தாம் ஈடுபடுவதற்கு முன்னர், தாம் விடுதலைப் புலிகளை ஓர் இராணுவ அமைப்பு என்றே கருதியிருந்தார் என்றும் -

நேரில் சென்று பார்த்தபோது அவர்களும் ஒரு பிரதேசத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து நிழல் நிர்வாகக் கட்டமைப்புகளுடன் இயங்குவதைத் தெரிந்து கொண்டார் என்றும் - தெரிவித்தார்.

எனவே, இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக மாகாணங்களுக்கிடையிலான அதிகாரப்பகிர்வே இருக்க முடியும் என்று தான் கருதுகிறார் என்றும் அவர் கூறினார். (க-16)

### இந்திய எண்ணெய் நிறுவன புதிய ஆலை திருமலையில்

லங்கா இந்திய எண்ணெய்க் கம்பனி திருகோணமலையில் உராய்வு நீக்கிய எண்ணெய் உற்பத்தி ஆலை ஒன்றை எதிர்வரும் மார்ச் அளவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தில் 4,500 கோடி ரூபா முதலீடு செய்யப்படவுள்ளது என்று கூறப்பட்டது.

இக்கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இது பற்றித் தெரிவிக்கையில்:-

உத்தேச ஆலை வருடாந்தம் 17 ஆயிரம் மெற்றிக் தொன் உராய்வு நீக்கிய எண்ணெயை உற்பத்திசெய்யும். இங்கு சுத்திரிக்கப்படும் எணணெயில் தொழிற்சாலைகளுக்கும், வாகனங்களுக்கும் தேவையான அளவு வழங்கப்படும்.

இந்தியக் கம்பனி இலங்கையில் 171 எரிபொருள் நிலையங்களை அமைத்துள்ளது. மாதமொன்றுக்கு இவை நாட்டின் எரிபொருள் பாவனைத் தேவை யில் 28 சதவீதத்தை வழங்குகின்றன - என்றார்.

---

## திருமண வாழ்த்து



இன்று (28-10-2004) வியாழக்கிழமை இல்லற வாழ்வில் இனிதே இணையும் உடுப்பிட்டி , இமையாணனைச் சேர்ந்த திருவாளர் **செல்வச்சந்திரன்** (B.A.Hons.) உரும்பிராயைச் சேர்ந்த திருவாட்டி **விஜயகலா** (B.A.Hons.) ஆகியோரை இல்லற வாழ்வல் பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**இரா.அகிலன், ராமதாஸ், ஜெகானந்தன், கருணா, சுந்தரமோகன், துஷ்யந்தன்.**

(38037)(34-13-18-32)

---

## ஒத்திவைப்பு

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றத்தினால் 30.10.2004 சனிக்கிழமை நடத்தப்படவிருந்த அதிபர்கள் தினம் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு 06.11.2004 இல் நடைபெறும்.

27.10.2004

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்

(சி-38509)(13-18-32)

---

## ஹாட்லியின் இதய அஞ்சலி

27.10.2004 புதன்கிழமை காலமான
எமது பழைய மாணவரும் முன்னாள் அதிபருமான

**பொ.வேணுகோபால்**

அவர்களின் பிரிவு தாங்க முடியாத
இதய வலியைத் தந்துள்ளது.
இழப்பினால் தவிக்கும் துணைவியார்க்கும்
பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.
அவர்தம் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

- ஹாட்லிச் சமூகம்

(சி-38508)(13-18-32)

---

## விழிநீர் வழிய அஞ்சலிக்கின்றோம்



**அமரர் பொ.வேணுகோபால்**

(வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம்)

எம்முடன் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுத் தீவகம் சென்ற தாங்கள் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெறுவீர்கள் என எதிர்பார்த்தோம். எம் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிவிட்டது.

தாங்கள் இழப்பால் ஆறாத் துயரில் இருக்கும் உங்கள் குடும்பத்தினருக்கு எம் அனுதாபங்கள்.

தாங்கள் ஆத்மா சாந்தியுற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

எம்துயர் துடைப்பவர் யாரோ?

வடமராட்சிக் கல்வி வலயம்,
புலோலி. - நலன்புரிக்கழகம்.

(சி-38510)(34-13-18-32)

---

## கொக்குவில் இந்துக் கல்லூரி

### பரிசளிப்பு விழா

*காலம்:* இன்று (28.10.2004) காலை 10.00 மணி
*இடம்:* பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
*தலைவர்:* திரு. பொ.கமலநாதன் (அதிபர்)

முதன்மை விருந்தினர்:
திரு.பரமநாதன் விக்னேஸ்வரன்
(யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்)

*பரிசில் வழங்கல்: திருமதி தவமணி விக்னேஸ்வரன்*

பெற்றோர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள்
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(சி-38512)(13-18-32)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வன்னியசிங்கம் ஞானவல்லி (பவளம்)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வன்னியசிங்கம் ஞானவல்லி அவர்கள் கடந்த (20.10.2004) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வன்னியசிங்கத்தின் அன்பு மனைவியும் செல்லப்பா - ஞானரெத்தினத்தின் அன்பு மகளும் தில்லைநாதன் - அன்னரத்தினத்தின் அன்பு மருமகளும் சுமதி (மீரா - டுபாய்) அவர்களின் அன்புத் தாயாரும் ரஞ்சன் (டுபாய்) அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஞானேஸ்வரன் மற்றும் ரஞ்சிதம் (மலேசியா), சரோஜினி (ராதா, வைமன் வீதி), கணேஸ் (கனடா) ஆகியோரின் சகோதரியும் விஜிதா, சபேசன் ஆகியோரின் பெரிய தாயாரும் துஸ்யா, பிரசன்னா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (21.10.2004) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவா, ராதா, கணேஸ் (கனடா), ரஞ்சிதம் (மலேசியா).

*8/4, வைமன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(38040)(43-13-18-32)

### அந்தோனிமுத்து பிரான்சிஸ் (சம்மாட்டி புறஞ்சி)



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் (26.10.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிசிலியாவின் அன்புக் கணவரும் அடைக்கலமரியை (பிரான்ஸ்), ஸ்ரனிஸ்லாஸ் (பிரான்ஸ்), மரியா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் றொபேட், ஜோசை, மதியாபரணம், அமுதா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது 101,பிரதான வீதி; யாழ்பபாண இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் யாழ்.கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்சகோதரர் யூட் (பேரன்).

*101,பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(38036)(43-13-18-32)

### செல்லையா பொன்ராசா (பொன்னுத்துரை)



கச்சாய் றோட், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்ராசா (பொன்னுத்துரை) அவர்கள் நேற்று (27.10.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாகபூபதியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (அப்பன்), கேதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கலைவாணியின் அன்பு மாமனாரும் கஜன், கஜாயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2004) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.4 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கேதீஸ்வரன் (அப்பன் - மகன்).

*கச்சாய் றோட்,*
*ஆத்தியடி வீதி,*
*கொடிகாமம்.*
(38041)(43-13-18-32)

---


இன்று முதலாம் அகவை நிறைவுசெய்து இரண்டாம் அகவையில் வெற்றிநடைபோடும்



திருமுருகன் கொம் நெற்

ஸ்தாபனத்தார்கள் விசேட சலுகைகளை வழங்குகின்றார்கள்.

WESTERN UNION பணம் பரிமாற்றம்

27.10.2004 முதல்
31.10.2004 வரை

FedEx Express

உள்நாட்டு வெளிநாட்டு தொலைத்தொடர்புகளுக்கு ரூபா 5.00 மட்டுமே

அனைத்துவிதமான தொலைபேசி அட்டைகளையும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, .
யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச.முன்பாக)

Tel - 021 222 7560
Fax - 021 222 7310

E.mail :- thirumuruglan@lycosmail.com

## நெஞ்சைவிட்டகலாத நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு
எமது அன்னை

20 ஆவது ஆண்டு
எமது தந்தை





திருமதி
மனோன்மணி சண்முகராசா — ஆறுமுகம் சண்முகராசா

22-04-1922 ← தோற்றம் → 13-12-1913
10-11-2003 ← மறைவு → 18-10-1984

திதி: அபரபக்க பிரதமை
28.10.2004

திதி: ஐப்பசி அபரபக்க அட்டமி

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்து அரவணைத்த அன்புத் தெய்வங்களை இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

185, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (38042) (29-43-11-18)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் பத்மாதேவி

கட்டுடையைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் பத்மாதேவி நேற்று (27.10.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நவரத்தினம் (கட்டட ஒப்பந்தக்காரர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - அன்னமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் மருமகளும் அம்பிகாதேவி (கொழும்பு), சாரதா தேவி (கனடா), இராஜினிதேவி (கனடா) ஆகியோரின் சகோதரியும் கந்த சாமி (இளைப்பாறிய ஆசிரியர், கொழும்புத்துறை), பாக்கிய லட்சுமி, முத்துமாரி மாணிக்கவாசகர் (கொழும்பு), செல்வரட்ணம் (கனடா), சுப்பிரம ணியம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் செந்தில்குமரனின் சிறிய தாயாரும் ஜெயபவானி, ஜெயபவன், மணிபவன், பத்மபவன், Dr.கிருஷ்ண ணி, சுகுணபவானி, அனுசியா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2004) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக பிற்பகல் 4.00 மணிக்கு பூணாவடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி தெற்கு,*
*அராலி.* (38047)(43-11-18)

தகவல்:
க.நவரத்தினம் (கணவர்).

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

உலக உளநல நாளையொட்டிய சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக 24.10.2004 அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு.

**வெற்றி இலக்கங்கள்**

| | |
|---|---|
| முதலாவது பரிசு இல. | 1383 |
| இரண்டாவது பரிசு இல. | 3844 |
| மூன்றாவது பரிசு இல. | 2210 |

மேற்படி இலக்கங்களுக்குரிய வெற்றியாளர்கள் கீழ்க்காணும் முகவரியில் 15.11.2004 இற்கு முன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

சாந்திகம்,
இல.15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (சி-38046)


**லக்சுமி சினிமா இணுவில்**
விஜய - சோனியா, ரஞ்சிதா வடிவேல் இன்னும் பலர் நடிப்பில்
மதுர (ரீலஸ்)

(37987) தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே)

**ராஜா யாழ்ப்பாணம்**
இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
7/G றெயின்போ காலனி (ரீலஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38041)

**நாகம்மஸ் சினிமா சுன்னாகம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந்த், ஸ்நேகா மற்றும் பலர் நடிப்பில்

போஸ் (ரீலஸ்) காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00. (பு.நே) (C-37740)

**நிறைசினமாஸ் சங்கானை**
சூரியா, மாதவன், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
ஆய்த எழுத்து (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
TYCUS வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே. (சி-37951)

**சிற்றி சினிமா பண்டத்தரிப்பு**
M.G.R., ராதா சலூஜா, வீரப்பா நடித்த
இதயக் கனி (ரீலஸ்)
காட்சிகள் தினசரி: 3.00, 7.00 (பு.நே)
சனி. ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே) (சி-37902)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவசம்பு நல்லம்மா

இணுவில் 4 ஆவது மைலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசம்பு நல்லம்மா நேற்று (27.10.2004) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-கனகம்மா தம்பதிகளின் மகளும் செல்லப்பா சிவசம்புவின் அன்பு மனைவியும் நாகரத்தினம், ஞானம்மா சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செந்தில்நாதன் (ஆசிரியர்,யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), சிவசோதிநாதன் (ஆசிரியர், யா/உடுவில் அ.மி.த.க. பாடசாலை), தயாபரி, சசி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2004) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4ஆம் மைல்,கே.கே.எஸ்.வீதி,*
*கோண்டாவில் மேற்கு.* (38048)(43-11-18)

தகவல்:
மருமக்கள்.

### முத்தையாபிள்ளை இரத்தினசபாபதி

காரைநகர், கள்ளுத் தெருவைப் பிறப்பிடமாகவும் மணற் பிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது பதுளையில் வசித்து வந்தவருமாகிய மு.இரத்தினசபாபதி நேற்று (27.10.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2004) வெள்ளிக் கிழமை பதுளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.11, குமாரசிங்க வீதி,*
*பதுளை.*
*T.P.:0552230461* (38043)(43-11-18)

தகவல்:
இ.பாக்கியலட்சுமி
(மகள்).

### திருமதி நமசிவாயம் இராசம்மா



சாவகச்சேரி வடக்கு, மடத்தடியைச் சேர்ந்த திருமதி நமசிவாயம் இராசம்மா அவர்கள் கடந்த (25.10.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்பு மனைவியும் கணேஸ்வரி, நடேஸ்வரன் (சுவிஸ்), யோகநாதன் (சுவிஸ்), சிவநாதன் (சுவிஸ) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகலிங்கம், பஞ்சலோஜினி, சாந்தினி, நிர்மலராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் செவ்வந்தி (தீபா), சத்தியேந் திரா (யா/தேசிய கல்வியியற் கல்லூரி, உப பீடாதிபதி), காயத்திரி, சபரீசன், கர்சனா, நிவேன், லவேன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2004) வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி.*
*சாவகச்சேரி வடக்கு,*
(38045)(43-11-18)

தகவல்:
சி.கனகலிங்கம் (துரை -மருமகன்),
செவ்வந்தி சத்தியேந்திரா (பேர்த்தி).

### பொன்னுத்துரை
### வேணுகோபால வாணிதாசன்

**(வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்)**



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், முன்னாள் வடமராட்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளரும், தற் போதைய தீவக வலயக்கல்விப் பணிப்பாளரு மாகிய பொன்னுத்துரை வேணுகோபால வாணி தாசன் நேற்று (27.10.2004) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் திருமதி சற்குணதிலகத்தின் (ஆசிரியை பருத்.வடஇந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் கோபிகா, யதுர்ஷா, யுவஸ்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி அருந்ததி இராமநாதன், திருமதி செல்வி சபாரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2004) வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அல்வாய் கருகம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மடத்தடி.*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.* (சி-38513)(43-11-18)

தகவல்:
திருமதி சற்குணதிலகம் வேணுகோபால்
(மனைவி).




**இன்று மங்களகரமான திறப்புவிழா**

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஐப்பசித்திங்கள் 12 ஆம் நாள் இன்று (28.10.2004) வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 9.00 மணிவரையில் வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்

**ரோசி சில்க்ஸ்**
**ROOSEE SILKS**

என்னும் ஸ்தாபனத்தை திறப்புவிழா செய்கின்றோம். அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் வரு கைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

8V, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். T.P:- 0777 286247 (C-38515)(38-11-18)

தங்கள்வரவை விரும்பும்
ம.சரத் தர்மரட்ணம் (கண்ணன்).


## கண்ணீர் அஞ்சலி



**தீவக வலயக் கல்விப்பணிப்பாளர்**
**பொன்னுத்துரை வேணுகோபால வாணிதாசன்**

நினைத்துப் பார்க்கமுடியவில்லை
நிஜம்தானா வென்று...
புன்னகை பூத்த முகம்
பொலிவிழந்து போனதென்ன
கண்ணில் தெரிந்த உந்தன்
கட்டழகு அழிந்ததுவோ
மெல்லச் சிரித்தெம்மை
மேனிசிலிர்க்க வைத்தீர்
கண்ணீரை உமக்காக
பன்னீராய்ச் சொரிகின்றோம்.

(C-38519)(3811-18-43)

தீவக கல்வி வலயப் பணிப்பாளர்கள்
உத்தியோகத்தர்கள், அதிபர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

# மந்திகையில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தில் குரும்பசிட்டியைச் சேர்ந்தவரான க.நாகநாதன் (வயது-34), துன்னாலை, அல்லையம்பதியைச் சேர்ந்தவரான க.மகேஸ வரன் (வயது-56) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் உடனடியாக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். அவர்களில் க.மகேஸ்வரன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அல்வாய் கிழக்கு, மடத்தடியைச் சேர்ந்தவரான தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வேணுகோபாலவாணிதாசன் விடுமுறை தினமான நேற்று தனது சகோதரி வீட்டுக்குச் சென்று கதைத்துக் கொண்டிருந்த போதே இந்த விபத்தில் சிக்கினார். இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு மந்திகை ஆதாரவைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

மூன்று பிள்ளைகளின் தந்தையாரான இவர், பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாவார். இவரது இறுதிச் சடங்குகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அல்வாய வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கின்றன.

இவரது மறைவுக்குத் தமிழீழ கல்விக் கழகத்தினர் உட்படப் பல தரப்பினரும் அனுதாபம் தெரிவித்திருக்கின்றனர். (4-36-118-173)

# தாயை வெட்டிக்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால், பின்பக்கமாக நின்று கழுத்தில் வெட்டிக் கொலைசெய்து சடலத்தை வீட்டுக்குப் பின்புறமாக - சுமார் இரண்டரை அடி ஆழமான குழி ஒன்றை வெட்டிப் புதைத்தார் என்றும் கூறப்பட்டது.

மாலை 4.30 மணியளவில் வீட்டுக்கு வந்த இறந்தவரின் மற்றொரு மகளும் மகனும் தமது தாயாரைக் காணாது தேடியுள்ளனர்.

அப்போது அவர்களது வீட்டுக் கிணற்றடியில் மனநோயாளியான தமது சகோதரி கத்தி ஒன்றைக் கழுவிக் கொண்டிருந்ததைக் கண்டு அவரிடம் சென்று 'அம்மா எங்கே?' என்று விசாரித்திருக்கின்றனர்.

அப்போது, 'அம்மாவின் கரைச்சல் தாங்க முடியாமல் இவரைக் கத்தியால் வெட்டிக்கொலை செய்துவிட்டு வீட்டுக்குப் பின்னால் கிடங்கு வெட்டிப் புதைத்திருக்கின்றேன். அதுதான் கத்தியில் இருந்த இரத்தத்தைக் கழுவிக் கொண்டிருக்கின்றேன்' என்று சர்வசாதரணமாகக் கூறினாராம் அவர்.

உடனடியாக அவர்கள் இருவரும் அயலவர்களின் உதவியுடன் குறிப்பிட்ட இடத்தைத் தோண்டிப் பார்த்த பொழுது அங்கு அவர்களது தாயார் இரத்தம் தோய்ந்த நிலையில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார் என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக உடனடியாக மானிப்பாய் பொலீஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கு வந்த பொலீஸார் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

கொலை செய்தவர் என்று கூறப்படும் பெண தானே இந்தக் கொலையைச் செய்தார் என்று பொலீஸாரிடமும் கூறினார். அவரைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். மரணவிசாரணை, பிரேதபரிசோதனை என்பவற்றுக்காக சடலத்தை யாழ். போதனாவைத்தியசாலையில், ஒப்படைககுமாறு பொலீஸாருக்கு அவர் உத்தரவிட்டார். சடலம் நேற்றிரவு மானிப்பாய் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக கப்பட்டது.

இதேவேளை, மனநோயாளியான பெண்ணுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர் என்றும் - அவரது கணவர் பிரிந்து வாழ்க்கின்றார் என்னும் தெரிவிக்கப் பட்டது. (4-ரி)

# துணிகர நகர்வுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான வழி மூலமான அரசியல் தீர்வுக்குச் சிங்கள அரசு தயாரில்லை என்பதையே காட்டுவதாக இருக்கும்.

புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான ஆவணம் சர்வதேச சட்டவல்லுநர்களின் துணையுடன் தயாரிக்கப்பட்டது. சர்வதேச சட்டங்களையும் - நியமங்களையும் - ஜனநாயகப் பண்புகளையும் உள்வாங்கி, இலங்கைத் தீவின் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப இது தயாரிக்கப்பட்டதாகும்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னரைப்போல் அல்லாது அர்த்தமுள்ளவையாகவும் - தமிழ் மக்களின் ஆதரவுடனும் நடத்தப்படவேண்டும். போரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் மனிதாபிமான தேவைகள் மற்றும் அவர்களின் சுயபாதுகாப்பு - இயல்பான வாழ்க்கை என்பவற்றை நிறைவேற்றக்கூடிய ஒரு தற்காலிக நிர்வாக அமைப்பு முறைதான் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையாகும்.

எனவே, சந்திரிகா அரசு குற்றம் சாட்டுவது போல அந்த இடைக்கால வரைவு பிரிவினைக்கான அடிப்படைகளைக் கொண்டுள்ளது என்பது உண்மைக்குப் புறம்பானதாகும். சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் - எந்தவித மூடிமறைப்புகளும் மற்று தயாரிக்கப்பட்ட இந்த இடைக் கால வரைவை - சந்திரிகா அரசு - சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது அபத்தமானது. சர்வதேசச் சமூகத்தையும் சந்தேகிப்பதாக உள்ளது.

புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில்தான் பேச்சு அமையவேண்டும் என்பது தமிழ்மக்களின் அரசியல் ஆணையாகும். நாடாளுமன்றிற்காக அண்மையில் நடந்த பொதுத் தேர்தல் வாக்களிபின் வாயிலாக தமிழ்மக்கள் இந்த மக்கள் ஆணையைப் புலிகள் இயக்கத்திற்கு வழங்கியுள்ளனர்.

எனவே, இந்த மக்கள் ஆணைக்குச் சந்திரிகா அரசு மதிப்பளிக்க வேண்டும்.

அதேவேளை, புலிகள் இந்த இடைக்கால வரைவை அடிப்படையாகக்கொண்டு அமைதிப் பேச்சுகளை சந்திரிகா அரசு ஆரம்பிக்கவேண்டு என்று ஐ.தே.கட்சியே கோரியுள்ளது. தேவையேற்பட்டால் இதற்கான நாடாளுமன்றப் பலத்தைச் சந்திரிகா அரசுக்கு வழங்கி - உதவத் தனது கட்சி தயார் என ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி அளித்துள்ளார். அத்துடன், தமிழ்க் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி போன்ற பிரதான கட்சிகளும் இதையேதான் சந்திரிகா அரசுக்குக் கூறி வருகின்றன.

அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, முக்கியமான பல சிங்கள அமைப்புகளும் புலிகளின் இடைக கால வரைவின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்குமாறு கோரிவருகின்றன. முன்னெப்போதும் கிடைத்திராத இந்த வரலாற்று வாய்ப்பை சந்திரிகா அரசு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதுதான் சமாதானத்தை நேசிப்போரின் வேண்டுகோளாக உள்ளது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவு மீது சர்வதேசச் சமூகமும் ஆதரவுப் போக்குடனேயே உள்ளது. புலிகள் இயக்கத்திற்குச் சர்வதேசச் சமூகம் வழங்கிவரும் தற்போதைய ஆதரவு இதையே வெளிப்படுத்துகின்றது.

இந்த நிலையில், புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால வரைவின் அடிப்படையில் சந்திரிகா அரசு உடனடியாகப் பேச்சை ஆரம்பிப்பதே சாலச் சிறந்ததாகும்.

இதைவிடுத்து, மாற்றுத் தீர்வுத் திட்டம் ஒன்றை வரைந்து அதன் அடிப்படையிலேயே பேச்சை ஆரம்பிக்க முடியும் என்று சிங்கள அரசு பிடிவாதம் பிடிப்பது நியாயமற்றது. வரலாற்றைப் பின்நோக்கி நகர்த்த முனையும் அந்த வீண்முயற்சிக்கு ஒத்துழைக்கப் புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

தனது தீர்வுத்திட்டத்தைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறி புலிகளுக்கு எதிராக ஒரு சர்வதேசப் பரப்புரையை அம்மையார் நடத்தத் திட்டமிடுவதும் பயனளிக்கப்போவதில்லை. சிங்கள அரசுகளின் அரசியல் கூத்துக்களை இனியும் தலையாட்டியவாறு பார்த்து, இரசிக்க சர்வதேச சமூகம் தயாராக இருக்கமாட்டாது என்று தமிழ்மக்கள் நம்புகின்றனர்.

சந்திரிகா அரசை நோக்கிப் புலிகள் இயக்கம விடுக்கும் அழைப்பு இதுதான் - "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்குத் துணிகரமான நகர்வுகளை - உறுதியுடன் [illegible]னெடுக்கவேண்டும்" - என்பதுதான் - இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரியை தெரிவித்துள்ளது. (எ-க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலும்மயிலும் தங்கரத்தினம்

அச்சுவேலி தெற்கு முத்துமாரி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலும்மயிலும்-தங்கரத்தினம் நேற்று (27.10.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலும்மயிலுவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பவளம்மா, சிவஞானசுந்தரம் (தவரததினம் - கூட்டுறவுப் பரிசோதகர் - மட்டக்களப்பு) மற்றும் புஸ்பரத்தினம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகரத்தினம் (மணிவண்ணன் - விஸ்ணு ஓட்டோ உரிமையாளர்) அன்புத் தாயாரும் சத்தியதேவியின் அன்பு மாமியாரும் விஸ்ணுகாந்தன், விஸ்ணுப்பிரியா, விஸ்ணுகோபன், விஸ்ணுதர்மிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2004) வியாழக் கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (C-38522)(38-11-18)

தகவல்:
வே.கனகரத்தினம்
(மணிவண்ணன் - மகன்)

## ஐயாத்துரை சண்முகம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் பளை, கச்சார்வெளியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சண்முகம் அவர்கள் நேற்று (27.10.2004) புதன்கிழமை காலமானார் .

அன்னார் சண்முகம் பரிமளத்தின் அன்புக் கணவரும் இலட்சுமி தேவி குமாரு (அலுவலகப் பணியாளர் பிரதேச செயலகம், பளை-செம்பருத்தி சைவ உணவக உரிமையாளரும்), ஜெயராசா, புவனேந்திரன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தயாளன் (சுகாதார சேவை திணைக்களம், முல்லைத்தீவு), சகுந்தலாதேவி, மல்லிகா, செல்வகுமாரி, தவராசா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2004) வியாழக் கிழமை பி.ப.5 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் சுப்பர்மடம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-38523)(38-11-18)

தகவல்:
சண்முகம்- குமாரு
(மகன்).

## சுப்பிரமணியம் செல்வராசா

(வாணி ரெக்ஸ் உரிமையாளர்)



சரசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வராசா அவர்கள் நேற்று (27.10.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கமணியின் அன்புக் கணவரும் மணிவர்ணன் (வாணி ரெக்ஸ்), மணிமாறன் (லண்டன்), ஜெயராஜன் (மொறட்டுவ பல்கலைக் கழகம்), சுதாகர் (லண்டன்), கலாவாணி (சா.இ.கல்லூரி மாணவி), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கென்ஸ்மன் லேன்,
டச்சு வீதி,
சாவகச்சேரி. (38050)(43-38-11-45)

தகவல்:
மணிவர்ணன்
(மகன்).

# சுவிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும - கூறப்படுகின்றது.

மனைவியின் வாக்குமூலத்திலும் இவரது மரணம் தொடர்பாக தெளிவற்ற தன்மை இருப்பதாகப் பொலீஸ் தரப்பிலிருந்து தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகள் மீது இச்சம்பவம் தொடர்பாகத் திட்டமிட்டு பழிசுமத்தப்பட்டிருப்பது குறிதது பல்வேறு தரப்பிலிருந்து கண்டனங்களும், அதிருப்தியும் வெளியிடப்பட்டுள்ளன. (எ-க)

# தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்மை அகாஷி சந்தித்துப் பேசவுள்ளார்.

யசூசி அகாஷியை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு ஜப்பான் தூதரகத்திடம் ஜே.வி.பி. தலைமைப்பீடம் கேட்டிருக்கிறது. எனவே, ஜே.வி.பி. தலைவரையும் அவர் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தங்கியிருக்கும் அகாஷி, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் குறித்து இங்கு சகல தரப்பினரையும் வலியுறுத்துவார் எனக் கூறப்பட்டது.

அவர் வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்திப்பார் என்றும் -

சமாதானப் பேச்சுக்களைக் கூடிய விரைவல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் புலிகளை வலியுறுத்துவார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இலங்கைச் சுற்றுப் பயணத்தை முடிததுக் கொண்டு புறப்படும் அகாஷி அடுத்த நாள் 3 ஆம் திகதி புதன்கிழமை இந்தியாவுக்கு உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் எனக் கூறப்பட்டது(எ-க)


NIRU TUITION CENTRE
KONDAVIL
சடப்பொருளியல்
Sat., Sun.,
- 5.00 (S.L.T.)
ஆரம்பம்:
30.10.2004
By:
M.கருணாநிதி
(38020)



வெளிவந்துவிட்டது
கணக்கீடு
எல்லைக் கிரயவியல்
Marginal Costing
(வினா - விடைகளுடன்)
ஆசிரியர்: B. முகுந்தன் B.B.A.(Hons)
கிடைக்குமிடங்கள்:
★ பொருளியற் கல்லூரி -யாழ். இணுவில்.
★ D.C.M. - யாழ்.
★ பாரதி கல்வி நிலையம்-சித்தனகேணி.
(38027)


# சாவுச் செய்தியால் துயரில் ஆழ்ந்துள்ளோம்

## அமரர் பொ.வேணுகோபால வாணிதாசன் (வேணுகோபால்)

(தீவக வலயக் கல்விப்பணிப்பாளர்)



யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினராகவும் தீவகக்கல்வி வலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளராகவும் கடைமையாற்றி வந்த பொ.வேணுகோபால வாணிதாசன் அவர்களின் திடீர் அகால சாவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம்.

முல்லை மாவட்ட மாந்தை கிழக்கு கோட்டக் கல்விப்பணிப்பாளராகவும் முல்லைத்தீவு வலயம், வடமராட்சி கல்வி வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளராக நெருக்கடி நிறைந்த காலங்களில் வன்னியிலும், வடமராட்சியிலும் பணியாற்றியதுடன் மிகவும் கஷ்ரப்பிரதேசமான தீவகத்தில் கல்விப்பணியை ஏற்று அப்பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உழைத்து வந்த சேவையாளரின் இழப்பு கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் யாழ். கல்விச்சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழீழக் கல்விக்கழகம்,
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை,
தமிழீழ மாணவர் அமைப்பு .

(C-38520)(38-11-18)

# கண்ணீர் அஞ்சலி



தீவக வலயக் கல்விப்பணிப்பாளர்
அமரர் பொ.வேணுகோபால வாணிதாசன அவர்களது அகால மரணச் செயதி கேட்டு அதிர்ச்சியும், ஆற்றொணாத்துயரும் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் பரிதவித்து நிற்கும் அவரது அன்புத் துணைவியாருக்கும், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாருக்கும், எமது ஆழந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-38521)(38-11-18)

வடமாகாண அதிபர்கள் சங்கம்.

# மரண அறிவித்தல்

## நடராஜா யோகேஸ்வரன்

தம்பாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மாதாங்கோயிலடி அல்வாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா யோகேஸ்வரன் அவர்கள் நேற்று 27.10.2004 காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னா இண்டஸ்றீஸ்,
வதிரி றோட்,
உடுப்பிட்டி.
(C-38524)(43-38-11-45)

தகவல்:
நடராஜா விக்னேஸ்வரன்
(அப்பன் - சகோதரன்),
விக்னா இன்டஸ்ரீஸ் உடுப்பிட்டி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.